சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

[illegible] தமிழ் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR G[illegible]
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

[illegible] ௩.

பக்கம்.


க. சிவநேசன் சீர்

உ. சிவநேசன் மதிப்புரையும் வாழ்த்தும் 3

௩. தமிழ்மொழி 4

ச. விநாயக சதுர்த்தி பூஜாவிதி 9

ரு. சம்பந்தர் சண்முகரே 17

சு. சாதிபேதம் 26

எ. தீண்டாதாரின் உண்மை நிலை 33

அ. சிவபெருமானை..........தியானித்தல் வேண்டும் 36

கூ. சபைத்தலைவர் உரை 37

௰. சிவநேசர் திருக்கூட்டம் 39

௰க. உயிர்களுக்குத் துணை சிவபெருமானே 40


[illegible]

## செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**—குமார விநாயகருக்கு மருந்து சாத்தி மகாபிஷேகமும், திருவாசக பாடசாலையின் ஆதி குருமூர்த்தியாயிருந்து சிவத்திற்கலந்த உயர்திரு கோவிந்தசுவாமி குருமூர்த்திக்குப் புதிதாக அமைத்துள்ள ஆலயத்தில், விநாயகர் தண்டாயுதபாணியுடன் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும் இம்மதி உஎவ ஞாயிற்றுக்கிழமை உத்திராடமும் அமிர்தயோகமுங்கூடும் நன்னாள் உதயாதி முதல் முக்கால் நாழிகைக்குள் சிம்மலக்ன நன்முகூர்த்தத்தில், ராம கு. குடும்பத்தினரால் செய்யப்பெறும்.

மணிவாசக சங்கத்தின் இருபத்திரண்டாவது ஆண்டு நிறைவுத் திருவிழா, அன்றைய பிற்பகலில் சிவநேசர் திருக்கூட்டத்தின் துணையுடன் தொடங்கப்பெற்று தேவார திருவாசகக் காட்சிகளுடனே, சிவமே பொருளெனத் தெளிந்த திருவாளர்களின் விரிவுரைகளும், அன்றுமாலை திருவுலாக்காட்சியும், அடுத்தநாள் முற்பகல் பிற்பகல்களில் பெருஞ் சொற்பொழிவுகளும், விபூதிக் கோயில் திருமுறைகளுடன் விநாயகப் பெருமானையும் சைவசமய பரமாசாரிய சுவாமிகள் நால்வரையும் எழுந்தருளச் செய்துகொண்டு பிரதோஷ புண்ணியகாலத்தில் சிவாலய சேவையும், பிள்ளையார் கூடத்தின் முன்பாக பிரசங்கங்களும் செய்யப்பெறும்.

குமாரவிநாயகர் திருக்கோயிலில்:—ஆவணிமீ உகூவ சதுர்த்தியில் நடராஜாபிஷேகம் நடைபெறும்.

*   *   *

உயர்திரு சச்சிதானந்த சுவாமிகள்:—கொரடாச்சேரி சித்தாந்த நிலயத்தில் உயர்திரு வாலையானந்தம் எனப் பெயர் விளங்கிய சுவாமிகள், வைகாசி ௬கவ ஆசாரிய அபிஷேகத்துடன் சிவபூசை யெழுந்தருள்விக்கப்பெற்று, சச்சிதானந்த சுவாமிகள் என்ற தீக்ஷாபிதானம் கொண்டு விளங்குகிறார்கள்.

()   ()   ()

கூழிப்பிறை:—முத்திவிநாயகர் கலாசாலையில் ஆடி கஅவ முத்துவிநாயகரை ரத்தினம் தாமோதரனைத்து ஊர்வலம் செய்யப்பெற்றது. இவ்வூர் நகர சுப்பிரமணியர் கோவிலில் இவ்வூர் இலுப்பக்குடி ஸ்ரீ ரத்தாய் மகேஸ்வரபூசை நடாத்தி 2000 ஜனங்களுக்கு அன்னமளித்தார்கள். சிவனடியார் திருக்கூட்டத்தில் ஆடி உசவ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு பூஜை நடாத்தி சரித்திரம் வாசித்து. அடியார் முதல் ஏழைகள் அனைவருக்கும் அன்னம் வழங்கி இரவு 8-மணிக்கு சுவாமிகளின் திருவுலாச் செய்விக்கப்பெற்றது.

16 FEB 1934
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬ } பலவான்குடி ஆங்கீரச-ஆவணி { திங்கள் க

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## சிவநேசன்சீர்.

சிவநேசன்மிகச் சீர்சிறந் தோங்கச்
சிவனருள் கணபதி செய்யதாள் துணையே.

உலகெலாம் ஒளிரும் ஒருதனி முதல்வராய், உண்மை அறிவானந்த உருவினராய், சிவன் எனும் நாமந் தனக்கே யுடைய செம்மேனியப்பராய், பசுபதிப் பெயரிய பாங்கருணைத் தடங்கடலாய், யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய அண்ணலாய், தேவதேவராய், மகாதேவராய், ஆன்மகோடிகட்குத் திருவருள் பாலிக்கும் சிற்சத்தியுடன்கூடி, ஒருபாற்றோடும் ஒருபாற்குழையும் இருபாற்பட்ட திருமேனியெந்தையாய் விளங்குகின்ற நித்திய நின்மல கர்த்தாவையே, சைவசமயிகள் பேரிறைவரெனக் கொண்டு போற்றுவர். அவர்தம் திருப்பெயரே மறைகளின் நடுவில் (இருதய ஸ்தானத்தில்) விளங்குவது கொண்டு, எல்லாச் சீவர்களின் இருதயஸ்தானத்திலும் உயிருக்குயிராக விளங்கும் மேலும் இவர் என்பது தெளிவாம்.

18699
JL
N27SN

சிவ என்னும் மகாவாக்கியமானது சத்தி சிவம் கலந்த நித்திய மங்களப் பொருளாய் விளங்குவது. அல்லல் வல்வினைகளெல்லாம் அகன்று நல்ல சுகத்தில் இருப்பவர்கள், சிவசிவ என்ற திருநாமோச்சாரணை பலனுடையவர்களே யாவரென்பது சித்தாந்தம்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே"

எனும் இவ்வொரு திருமந்திரமே சிவநாமத்தின் சிறப்பைச் செவ்விதிற் றிடமாக்கும்.

சிவ பரம்பொருளே ஆன்மகோடிகட் கெல்லாம் நாயகராம் உண்மை யோர்ந்து, அவநேச மொழித்து, தவநேச மாகிய சிவநேச முறுவதே, ஆன்மாக்கள் இன்பம் எய்துதற்கு ஏதுவாமென்பது, கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்திற் கண்டு தெளிவது ஒன்றாம்.

மங்கலமாம் சிவத்தை மாண்புடன் நேசித்து வாழும் பேற்றையே உயரியதாகப் பெற்று அவர்தம் திருப்பெயரைத் தலைக்கணியாக்கிப் பாராட்டும் பெருமைகொண்டே, இப் புதினத்தாளுக்குச் "சிவநேசன்" என்னும் பெயர் திருவருள் நலத்தால் சித்தித்ததாகும்.

சிவநேசன் சீர் இனிய தன்மையதென்று, சைவ நன்மக்களும் சான்றோர்களும் நன்கறிவர். "காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருவது" சிவநேசன்சீர் எனச் சிவநேசச் செல்வர்கள் சிந்தைகொள்ளுவர்.

இத்தகு சிறப்புவாய்ந்த சிவநேசன் ஐந்தாண்டுகளாக வாரத்தொருமுறை நேரிற் புகுந்து அன்பர்கட்கு இன்பூட்டிவந்தனன். சைவநலங் கருதி—தெய்வத் தமிழ்வளர்ச்சி கருதி—நான்முறை தெரிந்து சீலத்தொழுகும் பேரறிவாளர்களின் அறவுரைகளையே தாங்கிவருதலின் புத்தக வடிவுடன் திங்கள் வெளியீடாக வருதலே பெரும்பயன் தருமெனப் பெரியார் பலர் தேர்ந்து பணித்தமையானும், தொடர்ந்து பன்னெடுங்காலம் நடத்திவருதற்கு அதுவே ஏற்றதாமெனத் துணிந்தமையானும், இவ் வாறுவதாண்டுமுதல் திங்கள் வெளியீடாக



வெளிவருவதாயினன். தன் பெயருக்கேற்ற தகைசால் பெருமையுடன் அன்பர்கள்பால் வந்து அகமகிழ் ஊட்டுவன்.

சிவகுமாரராய் சிவசொரூபராய் திகழும் கற்பகக் களிற்றின் பொற்பத மலர்களைச் சென்னிசேர்த்து, சீரார் சிவநேசன் பணியைப் பேரார்வமுடன் மேற்கொண்டிருத்தலின், செய்கருமம் கைகூடி, சிவநேசன் திங்கள் தங்கு சடையார் திறம் பேணி எங்கணும் மிளிரத் திருவருள் பாலிக்கவும், உலகமக்கள் அனைவரும் சிவனுக் கன்பராய், சிவநேசனுக் கன்பராய், சிவநேசனை யாதரித்துச் சிவநேசச் செல்வர்களாய் வாழவும் வேண்டுகின்றோம்.

## சிவநேசனுக்குமதிப்புரையும் வாழ்த்தும்.

திருவல்லிக்கேணி ஞானசமோச்ச சைவசித்தாந்த சபையினர் திரு. நல். கண்ணப்ப முதலியார் அவர்கள்:—

பத்திராசிரியர் அவர்கட்கு:—

தாங்கள் மிகவும் ஊக்கத்துடன் உழைத்து நடாத்திவரும் சிவநேசன் சிறப்புற, திருஞானசம்பந்தப் பெருமானார் திருவருளை வேண்டுகிறேன்.

* * * *

போளூர் தாலூகா—வில்வாரணி—பூண்டிமடம் உயர்திரு முனிசாமி சுவாமியவர்கள்:—

தேசஞ் செழிக்குமே செந்தமிழு மோங்குமே
பீச னருளெவர்க்கு மெய்துமே—பேசும்
வில்வாண் குடிவாழ் வேர்த்தசிவ நேசன்
பலவான் குடிவாழும் பாங்கு.

* * * *

போளூர் போர்டு உயர்தர கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திரு. வி. சாமிநாதபிள்ளை அவர்கள்:—

திங்கடொறும் வந்து சிறந்தசிவ நேசனினித்
திங்கடொறும் வந்து சிறக்கவே—திங்கள்முடிச்
சாமி யருளாற் றழைக! திருராம
சாமி யதிபன் றனம்.

ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஆசிரியரும், சைவப் பிரசாரகரும் ஆகிய யாழ்ப்பாணம் மறைத் திருவாளர் வ. மு. இரத்தினேசுவரையர் அவர்கள்.—

வேதவா கமநூல்கள் விமலனரு ளினவென்று விளங்கக் காட்டி
நாதனார் நமக்கருளு முறைகளையே நல்லோரத் தாளில் நாட்டி
ஓதுசிவ நேசனெனு முயர்கதிரோன் மக்களுளத் திருளை யோட்டி
மாதமொரு முறைவரினு மதனகிரண மீண்டுமிகு மாண்பாய் வாழி!

முன்னவனார் திருவிளையாட் டனிகளையே முழுமக்கள் தேர்ந்து கொள்ள
நன்னயமார் போதனைகள் புரிசிவநே சன்பெருமை நாடி யன்பர்
சொன்னமுடன் வேண்டியன உதவிடுவோர் தூய்புகழ் மேவி வாழ்க!
அன்னையென ஆதைப்புரக்கும் ராமசாமிப்பெயர்கொள் அதிபன் வாழ்க!

---

# தமிழ்மொழி.

## கோநகர் சிவநேசச் செல்வர் மகாதேவ முருகப்ப செட்டியார் அவர்களின் திருவளாசெல்வர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

செந்தமிழ்நாட்டுச் சிறந்த அன்பு பூண்டொழுகும் சீரியோர்களே!

அலைகடல் உடுத்த நிலவுலகின்கண், கடவுளாற் படைக்கப்பட்ட மொழிகள் பலவற்றுள்ளும் மேன்மையுற்று விளங்குவது, நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியேயாம். இதன் தோற்றம், முற்கால தற்கால நிலை பெருமை முதலியவற்றை ஆராய்தலே, இக் கட்டுரையின் நோக்கமாம்.

தமிழ்மொழியை அநாதி என்றே கூறவேண்டும். ஏனெனில், 'வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரித லின்று' என்ற தேவர் திருவாக்குக்கு உரையெழுதமிடத்து ஆசிரியர் பரிமேலழகர், பழங்குடி என்பதற்கு 'தொன்றுதொட்டு வருகின்ற குடியின் கட் பிறந்தார்' என உரை கூறி, தொன்றுதொட்டு வருதலாவது, 'சேர சோழ பாண்டியரென் றாற்போலப் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டுவருதல்' என்று கூறுகின்றார். இதனால், தமிழரசர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு விளங்கி வந்திருப்பவர்களெனின்; அவர்கள் மொழியாகிய தமிழும் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு விளங்கி வந்திருக்குமென்பது பெறப்படும். இன்னும், 'சதுர்மறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின், முதுமொழிநீ யநாதியென மொழிகுவதும் வியப்பாமே' எனத் திருவனந்தபுரம் எம். ஏ. சுந்தரம்பிள்ளையவர்கள் கூறியவற்றாலும் அறியலாம்.



இம்மொழி, மற்ற மொழிகளைப்போலச் சிலகாலம் மேம்பாடுறுவதும், சிலகாலம் தேய்வுற்று இருப்பதுமான நிலைமையை உடையதாயிருக்கவில்லை யென்பதை, 'என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்' என்பதனாலும், ஆரிய அரசர்கள் மேம்பட்டு விளங்கிய காலமாகிய இராமாயண பாரத காலங்களிலும் மேம்பாடுற்று விளங்கியிருக்கிறதென்பதை,

'வளவன்பதி முதலாக வயங்கும்பதி தோறும்
அளவங்கம ழுகிசீதள தோயங்கள் படிந்தே
இளவண்டமி ழெழுதேடுமு னெதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ் புறவிஞ்செறி தண்கூடல் புகுந்தான்'

என்ற பாரதச் செய்யுளாலும்,

'ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்'

என்ற சங்கப் புலவர் வாக்கில் தமிழரசனைப் புகழ்ந்திருப்பதனாலும் அறியலாம்.

'சதுர்மறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்' என்று கூறயிருத்தலால், இஃது ஆரம்பகாலத்தில் உலகமுழுதுக்கும் பொதுப் பாஷையாக வழங்கிவந்திருக்கிறதென்பதும், பின்

'குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்.'

என நன்னூலும்,

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன லாட்டு'

எனச் சிலப்பதிகாரமும்,

'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறுநல் லுலகம்'

எனத் தொல்காப்பியமும்,

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்'

எனப் புறநானூறுங் கூறுதலால், பிற்காலத்தில் கிழக்கே வங்கக் கடலும், தெற்கே கன்னியாகுமரியும், மேற்கே குடக நாடும், வடக்கே திருவேங்கடமும் எல்லையாகக் கொண்டிருந்ததென்பதும் பெறப்படும். இனி, தமிழ்நாட்டிற்குத் தெற்கெல்லையாகிய கன்னியாகுமரி, முற்பொ

முழுது வழங்கினரும் கன்னியாகுமரி யெல்லையென்பதும், இதற்குத் தெற்கே பெருந்தூரம்வரை பரவியிருந்ததென்பதும், அது பிற்காலத்திற் கடலால் கொள்ளப்பட்டதென்பதும்,

'வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'

என்ற சிலப்பதிகாரச் செய்யுளால் அறியக் கிடக்கின்றது.

'இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்' என்று நன்னூலார் கூறுகிறபடி, ஆரம்பத்தில் தமிழ்மொழி இலக்கணம் பாகுபாடின்றி வழங்கிவந்தது. இற்றைக்குச் சற்றேறக்குறைய பன்னீராயிரம் வருடங்கட்கு முன் அகத்தியனாரால் இலக்கண வரம்பு பெற்றது. இதனைத் தமிழ்முனி முதலிய பெயர்களுடன் அவரை அழைப்பதுகொண்டு அறியலாம். இறையனார் அகப்பொருளுரையில் தலைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது, கடல் கொள்ளப்பட்ட மதுரை என்றும், அங்கு நாலாயிரத்து நானூற்று நாற்பது வருடங்கள் சங்கம் இருந்தது என்றும், இடைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்றும், அங்கு மூவாயிரத்தெழுநூறு வருடங்கள் சங்கம் இருந்தது என்றும் கடைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது வடமதுரை என்றும், அங்கு ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடங்கள் சங்கமிருந்ததென்றும் கூறுகின்றார். பிறகாலச் சரித்திர ஆராய்ச்சியாளர், கடைச் சங்கத்தின் முடிவுகாலம் கி. பி. முதல் நூற்றாண்டில் என்று தெளிந்திருக்கின்றனர். ஆகவே, முதற்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பது வருடங்களும், இரண்டாஞ் சங்கம் மூவாயிரத் தெழுநூறு வருடங்களும், மூன்றாஞ்சங்கம் ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடங்களும், மூன்றாஞ் சங்கம் நின்று ஆயிரத்தெண்ணூற்று முப்பது வருடங்களும், ஆக முதற் சங்கம் ஆரம்பித்தது ஏறக்குறையப் பன்னீராயிரம் வருடங்கள் ஆகின்றனவாதலாலும், அகத்தியர் முதற்சங்க காலத்திலேயே இருந்தவராகையாலும், அவரால் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுக்கப்பெற்றதாகையாலும், தமிழ்மொழிக்கு இலக்கண வரையறுத்தது, இற்றைக்குச் சற்றேறக்குறையப் பன்னீராயிரம் வருடங்களுக்குமுன் என்பது தெளியக் கிடக்கின்றது.

தமிழ் என்னும் பதத்திற்குப் பலர் பலவாறாகப் பொருள் கூறுவர். 'திராவிடம்' என்ற வடமொழிச் சொல்லே, நாளடைவில் திரிந்து, தமிழென்றாயிற்றென்று ஒரு சிலர் கூறுவர். இது முற்றிலுங் குற்ற முடைத்து. என்னெனில், ஒரு பாஷையையே தோற்றுவித்த பெரியோர்கள், அதற்கேற்படுத்திய பெயர் பிறமொழியிலிருந்தா எடுத்தாண்டிருப்பார்கள்? இன்னுஞ் சிலர் வேறுமொழியின் துணைவேண்டாது, தனித்தியங்கும் ஆற்றலுடையதாயிருத்தலால், தமிழெனப் பெயர்பெற்ற தென்றும், ஒப்பற்றதாதலால் தமிழெனப் பெயர்பெற்றதென்றும், வேறு எம்



மொழியிலுமில்லாத ழகரத்தைக் கொண்டிருத்தலால் தமிழெனப் பெயர்பெற்றதென்றும், மெய்யெழுத்துக்களுள் வல்லினமாகிய தகரமும் மெல்லினமாகிய மகரமும் இடையினமாகிய ழகரமும் ஆக மூன்றின் எழுத்துக்களும் சேர்ந்திருப்பதுபற்றி ஒருவாறு தமிழெழுத்துக்கள் இதனுள் அடங்கிவிடுமாதலால் தமிழெனப் பெயர்பெற்றதென்றும். இன்னும் பலர் பலவாறாகவும் கூறுவர். எவர் எது கூறினும் தமிழென்னும் பதத்திற்கு 'இனிமை' என்பதே பொருள். இதற்கு 'இனிமையும் நீர்மையுந் தமிழெனலாகும்' 'தமிழ்தழீஇய இனிமை நீர்மை' என்பவை மேற்கோளாகும். வடமொழி ஆங்கிலம் முதலியமொழிச்சொற்கள்போல மிகக் கடுமையாகவும் மிக மென்மையாகவும் உச்சரிக்கவேண்டியதின்றி யாவரும் எளிதில் இனியதாக உச்சரிக்கக் கூடியது நந்தமிழ் மொழி யொன்றேயாகும். அன்றியும் தமிழெனக் கூறவேண்டிய இடங்களிலெல்லாம் அதனைச் செந்தமிழ் பைந்தமிழ் மென்றமிழ் இன்றமிழ் வண்டமிழ் ஒண்டமிழ் நற்றமிழ் நறுந்தமிழ் என இவை முதலாகிய இனிய பெயர்களால் அழைப்பதாலும் அறியலாம்.

அகத்தியனார், தமிழ்மொழிக்கு இலக்கண வரம்பறுத்த காலத்தே, தமிழை மூன்றாகப் பகுத்தனர். அவை, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பெயர்பெறும். இவற்றுள் இயற்றமிழென்பது, நாமனைவரும் பேசும் மொழிகளும், கற்று வல்லபுலவர்கள் செய்த செய்கின்ற செய்யும் நூல்களுமாம். இசைத்தமிழென்பது, இராக தாளங்களுடன் கூடிய செந்தமிழ்ப் பாடல்களாம். நாடகத்தமிழென்பது, முன் கூறிய இராகதாளங்களுடன் நடனமுங்கூடியதாகும். இயற்றமிழின்றி இசைத்தமிழும் நாடகத்தமிழும் பயனபெறாதாகையால், இயற்றமிழை முன்வைத்தும், இசைத்தமிழின்றி நாடகத்தமிழ் பயன்பெறாதாகையால், இசைத்தமிழை இரண்டாவதாகவைத்தும், இயல், இசை என்ற இரண்டு தமிழுமின்றி நாடகத்தமிழ் இயங்காதாகையால், அதனை மூன்றாவதாகவும் வைத்தார்கள். இயற்றமிழுள் செந்தமிழ் வசன நூல்களும், செய்யுள் நூல்களும், இசைத்தமிழுள் சிந்து, ஆனந்தக்களிப்பு, தெம்பாங்கு முதலியவைகளும அடங்கும். நாடகத்தமிழோ, முற்காலமுதலே தேடுவாரற்று மறைந்தொழிந்து, அதன் விவரமே அறியமுடியாததாயிருக்கின்றது. நாடகத்தமிழ் மறைந்தொழிந்ததற்குக் காரணம், ஆரியரும் சைனரும் நாடகத்தாற் காமமே பெருகுமென்ற கொள்கையுடையராய் அதனை யெழவொட்டாது தடுத்ததுமன்றி, அக்காலத்திருந்த அரசர்களுக்கும் வேண்டியவளவு துர்ப்போதனைசெய்து, அதனை யெழவொட்டாது தடுத்ததேயாகும். அக்காலத்துச் சங்கப் புலவர்களியற்றிய அகத்தியம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல், கூத்தநூல், சயந்தம் முதலிய நூல்களெல்லாம் இவர்களின் பெருமுயற்சியால் ஒழிந்துவிட்டன. இதனால், தமிழ் நாடகத்தைக் காண்பது அரிதாயிற்று. நம்முறையைத் தழுவியே யேனாட்டாரும் (Epic) இயல் (Lyric) இசை (Drama) நாடகம் எனத் தங்கள் இலக்கியங்களைப் பிரித்துக்கொண்டனர்போலும். இக்காலத்து நாடகத்தமிழ் வழங்கவில்லையாதலால், ஆசி

ழில் நாடகமே இல்லையென்பர் ஒரு சாரார். இஃது ஒப்புமுடிந்ததன்று. அகத்தியனார், முத்தமிழுக்கும் இலக்கணங் கூறினாரென்று, நச்சினார்க்கினியர் கூறுகின்றார். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் பல நாடகநூல்களினின்று மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருப்பதாலும் அறியலாம். இனி, முத்தமிழும் சங்ககாலத்தே வரையறுக்கப்பட்டதும், வழங்கிவந்ததும், 'சங்கத் தமிழ்மூன்றுந் தா' என்ற செய்யுளால் அறியக் கிடக்கின்றன. இவை முதலிய பல சான்றுகளால், தமிழ் மொழியில், பல நாடகங்கள் வழங்கிவந்திருக்கின்றனவென்பதும், ஒரு காலத்தில் நாடகத்தமிழ் சிறப்புற்று விளங்கியிருக்கிறதென்பதும் அறியலாம்.

தமிழ்மொழிப் பெருமையைச் சாற்றப்புகின், அது அளவு கடந்து விரியும். எனினும் இரண்டொன்று கூறி முடிக்கின்றேன். பிறமொழிகளில் வல்லுநராகிய புலவர்கள், மொழிக்கு ஒருவர் இருவரேயிருப்பார்கள். ஆங்கிலேயரில் ஷேக்ஸ்பியரும், பிரெஞ்சுக்காரரில் மேலியாரும், கிரேக்கரில் ஹோமரும், வடமொழியாளரில் காளிதாசர் முதலியவர்களுமே வல்லுநர்களாயிருந்தார்கள். ஆனால், நம் தமிழ்மொழியிலோ, திருவள்ளுவர், சேக்கிழார், இளங்கோவடிகள், சிவஞான முனிவர், சாத்தனார், கம்பர், ஔவையார் முதலிய எத்தனையோ அரும்பெரும் புலவர் பெருமக்கள் நிறைந்திருந்தனர். இதனாலன்றோ,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம், யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை யுண்மைவெறும் புகழ்ச்சியில்லை' என்று கூறுகின்றார் பாரதியார்.

சிந்தாமணியின் நந்தரப்பண்பும், மணிமேகலையின் அணிகெழுபோக்கும், சிலப்பதிகாரத் திலக்கியச் செலவும், திருவள்ளுவரின் ஒருமொழி நயமும், கம்பர்கவியின் செம்பொருளின்பமும், பத்துப்பாட்டின் வித்தக நடையும், கல்லாடத்தின் எல்லாச் சிறப்பும், இன்னோன்ன பன்னூல் மாண்பு, பல்லூழிகாலம் பாடுகிடப்பினும், வருமோ மற்றோர்வாக்கின் வழித்தாய். இதுபோழ்து, இத்தகைய தமிழ்த்தாயை இகழ்ந்து புறக்கணிக்கின்றார்கள். பக்திச்சுவை நனிசொட்டும் திருத்தொண்டர் புராணமும், வர்ணனை மிக்க கம்பராமாயணமும், இலக்கியச் சுவைமிக்க சிலப்பதிகாரமும் முதலிய நூல்கள் தமிழ்நூல்களேயன்றோ? தாயையிகழ்ந்தவர் நாயினுங் கடையராவார்.

ஆதலால், அன்பர்களே! தாய்மொழி போற்ற யாவரும் முன்வாருங்கள்! பட்டினங்கள் தோறும் தமிழ்ப்பல்கலைக் கழகமும், கிராமங்கள் தோறும் தமிழ்க்கலாசாலைகளும் ஏற்படத்தக்க முயற்சி செய்யுங்கள்! 'எழுமின்! விழிமின்! கருதிய கருமங் கைகூடும்வரை உழைமின்!' என்ற அறிஞரின் வாக்கைக் கடைப்பிடியுங்கள்.

---





# விநாயக சவுத்தி பூஜாவிதி.

[சென்னை, திருவல்லிக்கேணி வேதாகமோக்த சைவசித்தாந்த சபை திரு. நல். கண்ணப்ப முதலியார்.]

*பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்*
*சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.*

ஆவணிமாதம் சுக்கிலபட்சம் சவுத்தி திதியன்று உதயத்திலெழுந்து ஸ்நானாதிகடன்களை முடித்துத் திருவெண்ணீறணிந்து, உருத்திராக்கமாலை பூண்டு, சிரசாதி பாதம்வரையில் விதிப்படி நியாசஞ்செய்து காமாக்கினியாதிகளைத் தணித்து, கணேச மூர்த்தியினுடைய திருவடிகளை மனத்திலிருத்தி, அம்மூர்த்தியின் மூலமந்திரத்தைச் செபித்துக்கொண்டு அபிடேகத்திற்குரிய திரவியங்களையும், அருச்சித்தற்குரிய மலர்களையும், நிவேதனத்துக்குத்தக்க பதார்த்தங்களையும், தூபதீபங்கட்கு வேண்டிய பொருள்களையுஞ் சேகரித்துப் பூசாமண்டபத்திற்புகுந்து, ஆசமனம், பிராணாயாம முதலிய கிரியைகளை முடித்து,

“ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாகம் ஸஹ குடும்பானாம் க்ஷேம ஸ்தைர்ய, விஜயாயுராரோக்கிய ஐஸ்வர்யாதீனாம் முத்த ரோத்ராபி விர்த்யர்த்தம், தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்த சித்யர்த்தம், ஸமஸ்த ஸங்கட பரிஹாரார்த்தம் ஸ்ரீ சங்கடஹர கணபதி முத்திஸ்ய ஸ்ரீஸங்கடஹரண கணபதி ப்ரீத்யர்த்தம், சல்போக்த ப்ரகாரேண ஸங்கட ஹரண சதுர்த்தி விரதங் கரிஷ்யே.” என்று சங்கற்பங்கூறி,

ஓர் வேதிகை யமைத்து அதன்மீது பச்சரிசி பரப்பி அதன்மீது இழைசுற்றி நீர் நிரப்பியிருக்கிற கும்பத்தை ஸ்தாபித்து அதற்குச் சந்தனம் புஷ்பம் அக்ஷதை முதலானவை

களை யணிந்து, "கலசஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ர ஸமாஸ்ரித: மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்ம மத்யே மாத்ரு கணா ஸ்ம்ருதா: குக்ஷௌ து ஸாகரா: ஸர்வே கலசாப்பு ஸமாஸ்ரிதா: ஆயாந்து கணேச பூஜார்த்தம் துரித க்ஷயகாரக: கங்கேச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதீ நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிங்குரு"

என்று கலச பூஜைசெய்து அதன்மீது ஓர் தட்டை யமைத்து அதன்மீது வஸ்திரம் விரித்து அதன்மீது யந்திரம் வைந்து அதன்மீது சித்திபுத்தி சமேதராயிருக்கின்ற விநாயக மூர்த்தியை எழுந்தருளச்செய்து அபிஷேக திரவிய முதலியவைகளையும் மந்திர பூர்வமாகச் சுத்திசெய்து, தவாரத்தையும் பீடத்தையும் உரிய மந்திரங்களாற் பூஜைசெய்து கரத்திற் புஷ்பமும் அக்ஷதையுங் கொண்டு,

"லம்போதரம் சதுர்ப்பாகும்—த்ரிநேத்ரம் ரக்த வர்ணகம்—ஸர்வாபரண சௌபாக்யம் ப்ரசன்னாஸ்யம் விசிந்தயேது லம்போதராயநம த்யானம் சமர்ப்பயாமி" என்று தியானஞ் செய்து,

"ஆகச்ச விக்நராஜேந்திர-ப்ரஸன்னோ தர ஸ்திரோபவ-அராதயாமி பக்த்யாகம்-பவந்தம் ஸர்வஸித்தயே-விக்னராஜேநம: ஆவாஹனம் ஸமர்ப்பயாமி." என்று ஆவாகனஞ் செய்து,

"அபீஷ்டார்த்த சித்யர்த்தம்-பூஜிதோயஸ் ஸுரைரபி-ஸர்வ விக்னச் சிதேதஸ்மை-கணாதிபதயேநம: வக்ரதுண்டாயநம: ஆஸனம் ஸமர்ப்பயாமி" என்று பீடமிட்டு,

"கணாதிப நமஸ்தேஸ்து-ஸர்வஸித்திப்ரதோபவ-பாத்யம் க்ருஹாண தேவேச-சுராசுர பூஜித-கணாதிபாயநம. பாத்யம் ஸமர்ப்பயாமி,

ரக்த கந்தாக்ஷதோபேதம்: ரக்தபுஷ்போப சோபிதம்: அர்க்யம் க்ருஹாணபகவன்-மயாதத்தம்ஹி பக்திதம்-சுத்ரார்த்த தாரிணேநம: அர்க்யம் ஸமர்ப்பயாமி,



ஸுராஸுர ஸமாராத்ய-ஸர்வ சித்திப்ரதாயக-மயா தத்தம் சுராஸ்ரேஷ்ட க்ருஹாண சமனீயகம்: விஸ்வப்ரியாயநம: ஆசமனம் ஸமர்ப்பயாமி" என்று பாத்யம்—அர்க்யம்-ஆசமனங் கொடுத்து,

"சுதயந்தி த்ரவ்ய மாத்ராணி-கங்கா தோயை கணாதிப-அதஸ்நாநு பதத்தோயம்-ஸ்வீகுருஷ்வ மயார்ப்பிதம்-ஸர்வஸித்தி ப்ரதாயகாயநம. ரஜோபகர்ஷணஸ்நானம் ஸமர்ப்பயாமி." என்று திருமஞ்சனமாட்டி,

"நமஸ்தே கணநாதாய-நமோ மூஷிக வாசன-உமாசுத நமஸ்துப்யம்-மதுபர்க்கம்-க்ருஹாணபே-பிரஹ்ம சாரிணேநம: மதுபர்க்க நைவேத்யம் ஸமர்ப்பயாமி" என்று தேன் கலந்த பால் பழ முதலியவைகளை நிவேதனம் செய்து,

"ததி க்ஷீராஜ்யமதுபி சர்க்கராஸஹிதை கவை பஞ்சாம்ருதை ஸ்நானபயாம்—கணாத்யக்ஷநமோஸ்துதே, பஞ்சாம்ருத ஸ்நானம் ஸமர்ப்பயாமி,

ஸ்வாபேயம் மஹாதிவ்யம்-பவித்ரம் புஷ்டிவர்த்தனம்-ஸ்நாநாயதே மயாதத்தம்-க்யஹீஷ்வ சுரஸத்தம க்ஷீரஸ்நானம் ஸமர்ப்பயாமி,

மகஸ்வாது சமாயுக்தம் ப்ரசித்தம் பரமாத்புதம் ஸ்நாநாயதே மயாதத்தம் ததீதப்ரதிக்ருய்ஹதாம் ததிஸ்நானம் ஸமர்ப்பயாமி,

தேவர்க்ஷீணும் ப்ரியம் புண்யம் பவித்ரம் புஷ்டி வர்த்தனம் ஸ்நாநாயதே மயாதத்தம் க்ருஹாணாஜ்யம் நமோஸ்துதே, க்ருதஸ்நானம் ஸமர்ப்பயாமி,

அநேக வ்ருக்ஷ நிலய குசுமோத் பூதபம்புதம ஸ்நாநாயதே மயாதத்தம் கணேசப்ரதிக் ருய்ஹதாம் மதுஸ்நாநம் ஸமர்ப்பயாமி,

இட்சுகண்ட ஸமுத்பூதா பரஸ்வாத்ய தராசுபா, சர்க்கரேயம் மயாதத்தா ஸ்நாநார்த்தம் ப்ரதிக் ருய்ஹதாம், சர்க்கராஸ்நானம் ஸமர்ப்பயாமி,

கங்காயாஸ்ஸலிலம் சுத்தம் சுவர்ண கலசேஸ்திதம் சுவாசிதம் பரிமளோபேதம் ஸ்நாபயாமி கணேஸ்வர சுத்தோதக ஸ்நானம் ஸமர்ப்பயாமி,

என்று பஞ்சாமிர்தம் பால் தயிர் நெய் தேன் சர்க்கரை சுத்தோதகம் என்னுமிவைகளை அபிஷேகித்து, (ரசமுள்ள பழவர்க்கங்களையும் இளநீரையும் அபிஷேகிக்கலாம்.)

ரக்தவஸ்திரம் திவ்யம் ஸுவர்ணோக ப்ரகாசனம் மயாதத்தம் கணாத்யக்ஷ க்ருஹாண மங்கலப்ரதா வஸ்திரம் ஸமர்ப்பயாமி,

குங்குமாக்தம் மயாதத்தம் க்ருஹாண காமுபவீதம் உத்தரீயேண ஸம்யுக்தம் சுபதம் கணநாயக யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி,

கோடி சூர்யப்ரகாசீச ரக்தவர்ண சதுர்ப்புஜ மயாஸமார்ப்பிதானீஹா பூஷணானி க்ருஹாணபோ, ஸர்வாபரணானி ஸமர்ப்பயாமி,

சந்தனாகரு கர்ப்பூர குங்குமாதிஸமன்விதம் கந்தம் க்ருஹாண தேவேச ஸர்வஸித்திப்ரதாயக, கந்தம் ஸமர்ப்பயாமி,

அக்ஷதாம்ச சுரஸ்ரேஷ்ட்ட குங்கும கருஸம்யுதாம் க்ருஹாண விக்ன ராஜேந்த்ர மயாதத்த தாஹி பக்திதம், அக்ஷதான் ஸமர்ப்பயாமி,

ரக்த புஷ்பாக்ஷ விக்னேச கைகளிய சதி சங்கயா க்ருஹாண சுமுகோ பூத்வா மயாதத்தான்யுமா சுதா புஷ்பாணி பூஜயாமி,

சுகந்திநிச மால்யானி க்ருஹாண கணநாயக விநாயக நமஸ்துப்யம் சிவசூனோ நமோஸ்துதே மால்யானி ஸமர்ப்பயாமி,

என்று வஸ்திரம் யக்ஞோபவீதம் சர்வாபரணம் கந்தம் அக்ஷதை புஷ்பம் இவைகளைத் தரித்து அறுகம்புல்லினால் இருபத்தொரு நாமங்கள் அருச்சனைசெய்து,

ஓம்ஸங்கடநாசனாயநம—பாதௌபூஜயாமி
ஓம்ஸுஜங்காயநம—ஜங்கேபூஜயாமி



ஓம் ஆகுவாஹனாயநம—ஊருபூஜயாமி
ஓம்ஹேரம்பாயநம—கடிம்பூஜயாமி
ஓம்லம்போதராயநம—உதரம்பூஜயாமி
ஓம்ஸ்கந்தாக்ரஜாயநம—ஸ்கந்தௌபூஜயாமி
ஓம்பாசஹஸ்தாயநம—ஹஸ்தான்பூஜயாமி
ஓம்ஸ்தூலகண்டாயநம—கண்டப்பூஜயாமி
ஓம்ஸர்வேஸ்வராயநம—சிரப்பூஜயாமி
ஓம்சங்கடநாசினேநம—சர்வாங்காணிபூஜயாமி

என்று பாதம்-கணைக்கால்-துடை-நிதம்பம்-வயிறு-கழுத்தடி-கரம்-கண்டம்-சிரம்-சர்வாங்கம் என்னும் பத்திடங்களிலும் அங்க பூஜை செய்து ஆவரண பூஜையும் முடிக்க.

பிறகு, சிறுசண்பகம்-வில்வம்-கரசலாங்கண்ணி-அறுகு-இலந்தை-ஊமத்தை-துளசி-நாயுருவி-சிறுமுதி-வன்னி-அல்லி-மூங்கில்-வெள்ளெருக்கு-மருதம்-விஷ்ணுக்ராந்தம்-மாதுளை-மந்தாரை-மருவு-ஜாதிமல்லி-வெண்ணொச்சியிலைப் பத்திரங்களைக் கொண்டர்ச்சித்து.

ரோஜா, சண்பகம், சாமந்தி, மல்லிகை, சாபங்கி, செங்குவளை, தாழை, மகிழ், தாமரை, புன்னை, ஊமத்தை, முல்லை, விஷ்ணுகிராந்தம், வெள்ளைக்காக்கணம், நாகமந்தாரை, குரா, கோங்கு, செம்பரத்தை, பசுப்பாலில் தோய்த்தெடுத்த வெள்ளெருக்கு, அகத்திப் புஷ்பங்களைக்கொண்டு அருச்சிக்கவும்.

பிறகு, அஷ்டோத்தர சதநாமார்ச்சனை அல்லது பதினோராந் திருமுறையிலுள்ள மூத்தநாயனார் இரட்டைமணி மாலைகளால் தோத்திரம் செய்தல் வேண்டும்.

வனஸ்பத்யுத்பவம் தூபம், தசாங்ககருஸம்யுதம்க்ருஹாண மங்களம் திவ்யம், மயாதத்தம் விநாயக உமாசுதாயநம: தூபம் ஸமர்ப்பயாமி,

க்ருதார்த்தவர்த்தி ஸம்யுக்தம் தீபம் ஸர்வப்ரகாசகம், க்ருஹாணேதம் மயாதத்தம், தேஜோராஜே ஜகத்பதே-ருத்ரப்ரியாய நம: தீபம் ஸமர்ப்பயாமி,

அன்னைஸ் சதுர்விதைஸ்வாது ரஸை ஷஷ்டி ஸமன்விதம், பக்தியா நிவேதிதம் தேவா, நைவேத்யம் ப்ரதிக்ருய்ஹதாம், போஜைர் நாநாவிதைர்யக்தான் மோதகான் க்ருதபாசிதான், க்ருஹாண விக்னராஜேந்த்ர, ஸர்வகார்யார்த்த ஸித்தயே விக்னநாசினே நம: நைவேத்யம் ஸமர்ப்பயாமி,

பலானி மானிப [illegible] தவாக்ர, தேனமே ஸ்பலாவாப்தி, ப [illegible] விக்னமனி ஸங்கட நாசினே நம: பூர்ணபல ஸமர்ப்பணம் ஸமர்ப்பயாமி,

பூகிபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம் கர்ப்பூரசூர்ண ஸம்யுக்தம், தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ஸ்ரீ விநாயகாய நம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி,

[illegible] அமர்த்யார்த்தம் ஸ்வர்ண புஷ்பம் மயேஸ்வர, ஸ்தாபிதம் தேன மே, ப்ரீத்யை பூர்ணாக்ம ருமனோரதன் விக்னேஸ்வராய நம: ஸ்வர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி,

என்று தூபம்-தீபம்-நைவேத்தியம் பூர்ணபலஸமர்ப்பிதம் தாம்பூலம்-ஸ்வர்ண புஷ்பம் என் றுமிவைகளைக் கொடுத்து,

ஓம் கணாதிபாய நம:
ஓம் உமாபுத்ராய நம:
ஓம் அகநாசினே நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் இபவக்த்ராய நம:
ஓம் மூஷிகவாஹனாய நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் ஈசபுத்ராய நம:
ஓம் ஸர்வஸித்திப்ரதாயகாய நம.
ஓம் குமாரகுரவே நம:
ஓம் ஸர்வஸங்கட நாசனாய நம:

என்று அறுகம்புல்லினு லருச்சித்து,

கணாதிப நமஸ்தேஸ்து உமாபுத்ரா கஜானன ஏகதந்தே பவக்த்ரேதி ததா மூஷிக வாகன விநாயகேசபுத்ரேதி ஸர்வ ஸித்திப்ர தூர்வா யுக்மம் பூஜாம் ஸமர்ப்பயாமி.

கணேசா வக்ரதுண்டஸ்ய உமாபுத்ரஸ்த்தைவச விக்னராஜ காமதஸ்ச விக்னேஸ்வரயிதீஸ்முர்த, ஜீமூதஸ்சக்தி ஸம்யுக்தோ கௌரீமனஸ்முத்பவ: ஏகித்யேஸ் சுத்தகுணோ மஹாகாய இதிஸ்முர்த: ததஸ்ஸ ஸித்தித: ப்ரோக்தோ மஹோதர இதிஸ்முர்த:

கஜவக்த்ரஸ்ச மஸ்சதத, பாசுதார்யபி, கவிக்கும்போவிஸ்வமூர்த்தி உக்ர தேஜாஸ்தன்தவச லம்போதரஸ்த தஸ்ஸித்தி கணேசச்சைசக விப்சதி" என்று தியானஞ்செய்து,



நாமனி ரமணியானி, ஜபேகபிஸ்த பூஜயேத, கணேசா தஸ்ய வஸ்யந்தி சங்கடானி மஹாந்த்யபி,

மஹாஸங்கட தந்தேசா ஹாப கணேசசரணாகதம் தஸ்மான் மனோரதம் பூர்ணம் குருவிஸ்வேஸ்வரப்ரியா தஸ்வர்ணமய புஷ்பா விக்னேசாய நிவதயேத்கணேசாயநம: நைவேத்யம ஸமர்ப்பயாமி,

கணாதிபநமஸ்தேஸ்து, சத்யக்ஞானப்ரகாசக, நீராஞ்சனம் ப்ரதர்ஸயாமி தேஜோராஜ நமோஸ்துதே. கணாதிபாய நம: உத்தரநீராஞ்சனம் சமர்ப்பயாமி,

யசனி கானிச பாபானி-ஜன்மாந்தரக்ருதானிச-தானிதானி வினஸ்யந்தி-ப்ரதக்ஷிண பதேபதே, ப்ரபோஹம் பாபகர்மாஹம்-பாபாத்மா பாபஸம்பவ த்ராஹிமாம் க்ருபயா தேவ-சரணாகத வத்சல, அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம-தஸ்மாத் காருண்யபாவேன ரக்ஷ ரக்ஷ கணாதிப கணாத்யக்ஷாய நம: பிரதக்ஷிணம் ஸமர்ப்பயாமி,

நமோஸ்து தேகவ தேவச- பக்தானுமாயப்ரதா-விக்னாம் நாசகர்தரே த-ஹாரத்மஜ நமோநம. விக்னானாசினே நம. நமஸ்காரம் ஸமர்ப்பயாமி.

வக்ரதுண்ட மஹாகாய சூர்யகோடி ஸமப்ரப அவிக்னம் குருமேதேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா. வக்ரதுண்டாய நம: ப்ரார்த்தனாம் ஸமர்ப்பயாமி.

என் றுநைவேத்யம் உத்தரநீராஞ்சனம் பிரதக்ஷணம் நமஸ்காரம் பிரார்த்தனம் இவைகளைச்செய்து,

கணேஸ்வர, நமஸ்துப்யம்ஸர்வஸித்திப்ரதாயக சங்கஷ்டம் ஹரமேதேவ க்ருஹாணார்க்கியம் நமோஸ்துதே கணேசாய நம. இதமர்க்யம் ஸமர்ப்பயாமி,

ப்ரதிமாம் ஸ்ரீவதத்யா தாசார் யயஸ பட்சிணாம் வஸ்த்ரம் கும்பசமாயுக்தா மாதெள மந்திரமிமம் படேத், கணேஸ்வர ப்ரஸாதேன மமஸம்து மனோரதா: துப்யம் ஸம்ப்ரததே தேவ ப்ரதிமாமது கஜானன இஷ்டகாமார்த்த ஸித்யர்த்தம் புத்ர பௌத்ர ப்ரவர்த்தன் கணாதிராஜ தேவேச விக்னராஜ விநாயக தவமூர்த்திப்ரதானேன ப்ரசன்னோபவ சர்வதா. ஸ்ரீ சற்குரவே நம: கலசப்ரதிமாதானம் ஸமர்ப்பயாமி என்று ஆசார்ய பூஜைசெய்து பூர்த்திசெய்தல்வேண்டும்.

விநாயக சதுர்த்தி விரதத்தை ஏதோ ஒரு சாமானிய விரதமாகவும், அச் சதுர்த்தி பூஜையையும் அவ்வாறே நடத்திவருகின்றதைக் கண்ணுற்ற யாம் அதனைச் செய்யவேண்டிய முறையை எமது ஆசிரியர் வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் பிரசங்கரூபமாக எழுதி வைத்ததையே பலருக்கு உபயோகமாம்பொருட்டு இதனை வெளியிடலானோம்.

இங்கு விநாயக சதுர்த்தி தினம் கடைகளில் விற்கிற களிமண் விநாயகரையும் வர்ணங்களால் சித்திரிக்கப்பட்ட விநாயக வுருவங்களையும் விலைகொடுத்துவாங்கி ஓர் தட்டிலாவது அல்லது மணையிலாவது வைத்துக்கொண்டு, விலைகொடுத்துவாங்கிய விநாயக விக்ரஹங்களினது பிருஷ்டபாகத்தில் அவைதிகர்களால் மாப்பசையினால் ஒட்டப்பட்ட காகிதக்குடைகளைச் செருகியும் ஊதுவர்த்திகளைப் பாதத்தினிடத்துச் செருகியும், பிரப்பம் பழம், நாவற்பழம் முதலிய பழங்களைச் சிறு செப்புக்காசுக்கு வாங்கி விநாயகமூர்த்தி எதிரிலேயே கொட்டியும், நீலவர்ணமுள்ள எருக்கம்பூமாலை ஒரு தம்படிகொடுத்து வாங்கி கடையிலேயே விக்கிரகத்தின் கழுத்திற் பூட்டியும், வீட்டிற் கொண்டுபோய் சலம் ப்ரோக்ஷணமாகிலும் செய்யாமல் பலகார வகைகளை வைத்துக்காட்டி வயிறார உண்பவர்கள் உச்சீவிக்குமாறு இப் பூஜாவிதி விலைமதித்தற்கரிய இச் சிவநேசன் வாயிலாக எழுத நேரிட்டது. விநாயகமூர்த்தியின் அஷ்டோத்தரம் சகஸ்ரநாம முதலியவை எழுதினால் விரியுமென்றே விடுத்தனம்.

அடியரிடர் தீர்த்தருளும் ஆனைமுகவன் பாதங்
கடிமலர்தூய்க் கைதொழுவாங் கண்டு

---

## அருளிறை வணக்கம்.

தேவர்தொழு தெழுங்கருணைச் செல்வனே போற்றி!
சிறந்தொளிரு மங்களசொரூபனே போற்றி!
ஓவாதசித்திகளனைத்து முதவுவோய் போற்றி!
ஒலிகெழுகிண் கிணிபாத சாலறா புரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றிமத தாரை
விரவியதிண் கபோலனே போற்றிநின தருளின்
பாவமொடு பலபிணியும் பம்புவறு மைகளும்
பலவான விடர்களையும் பாற்றுகவின் புறவே.

---

உ

# சம்பந்தர் சண்முகரே.

திருமயிலை-திருவாளர் மு சுந்தரவடிவேலன் அவர்கள்.

திருச்சிற்றம்பலம்.

"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்"

"எதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட் டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே"

திருச்சிற்றம்பலம். திருஞானசம்பந்தர்.

14-3 32ல் வெளிவந்த 'சிவநேசன்' எனும் மேதக்க பத்திரிகையில் 'சண்முகனே சம்பந்தரே யல்ல' என்று கயப்பாக்கம் திருவாளர் சோமசுந்தர செட்டியார் அவர்களால் நிரூபணஞ் செய்ய முயற்சிக்கப்பட்டிருத்தலை அடியேன் கண்ணுற்று, கலைஞானமும் மன்றி முருகனருள் பரிபூரணமாகப் பெற்ற அருணகிரிநாதர், சிதம்பர சுவாமிகள், கலைமகளருள் பெற்ற கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் முதலான பெரியோர்களின் ஒற்றுமைக் கருத்தினைத் தழுவி 23—5—32ல் வெளிவந்த சிவநேசனில் 'சண்முகன்தானே சம்பந்தர்' என்று அம் மெய்யன்பர் எடுத்துக்காட்டிய பலத்த பிரமாணமாகிய தேவாரத்தைக்கொண்டும் சைவசித்தாந்த சண்டமாருதமென விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சூளை சோமசுந்தர நாயகர் அவர்களின் நூலைக்கொண்டும் அவ் வன்பரெழுதிய கண்டனத்திற்கு விடை வரைந்தேம். அவற்றிற்கு மறுமொழி அம் மெய்யன்பர் திரு. சபாபதி நாவலர் அவர்கள் எழுதிய 'திராவிடப்பிரகாசிகை' எனும் அரியதொரு நூலையும் திருத்தொண்டர் புராணத்தையும் தேவாரத்தையும் ஆதாரமாகக் கொண்டு 4—7—32ல் வெளிவந்த சிவநேசனில் மறுப்பு எழுதியிருந்ததைக் கண்ணுற்றதும்; அவர் பற்றுக்கோடாகக்கொண்ட அம் மெய்ந் நூல்களைக் கொண்டும், திருவருட்டுணைகொண்டும் யாமும் விடையிறுக்க முற்பட்டனோமே யொழிய, வேறுவிதமாக அன்பர்கள் நினைத்துவிடக்கூடாது என்பது எனது தாழ்வான முறையீடு.

சண்முகர் (பிறப்பிறப்பில்லாத முழுமுதற் கடவுள்) தான் திருஞானசம்பந்தராக வந்து தோன்றினார் என்றதால், சைவத்திற்கும் சைவசித்தாந்த சாஸ்திரங்களுக்கும் இழுக்கு வந்துற்றதே யொழிய, [illegible]

எழுதிய வியாசத்தில் ஒரு வாக்கியம் அல்லது ஒரு சொல்லேனும் ஞானசம்பந்தரது தெய்வத்தன்மைக்கே குறைவேற்படும் விதத்திலாவது சாஸ்திரத்திற்கு முரணேற்படும் விதத்திலாவது எழுதவேயில்லை எனபது நமது அன்பர் திரு. செட்டியாரவர்களின் வாதம். 14—3—32ல் அவரே எழுதிய முதற் கண்டனத்தில் 2-வது பத்தியில் திருஞானசம்பந்தர் 'மையல் மானுடராகப் பிறக்க நேர்ந்ததைப் பற்றி வருந்தியதாக 'துறக்குமா சொலாய்' என்ற தேவாரத்தை எடுத்துக்காட்டி அதோடு நில்லாமல் சம்பந்தர் சண்முகராக விருந்திருந்தால் மீண்டும் இப் பூவுலகில் பிறக்க நேரிடுமோ! சண்முகர் பிறந்தாரென்றாலும் சங்கரன் பிறந்தாரென்றாலும் ஒன்றுதானே. அப்போது 'ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ் சோதியாகிய' பரமேஸ்வரனுக்குப் பிறப்புண்டு என்றும், அப்படிப் பிறப்புண்டானால் ஒருகாலத்தில் இறப்பும் உண்டு என்றுமல்லவா முடியும்? என்று கூறிப்போந்தார். பிறப்புண்டானால் ஓர் காலத்தில் இறப்பும் உண்டு என்று ஒப்புக்கொள்ளக்கூடிய இப் பெருந்தகையவர் எமது இறைவன் திருஞானசம்பந்தர் பிறந்தார் என்று சாதிப்பாரானால் இவரது கொள்கையின்படியே அவர் இறந்திருக்கவேண்டுமென்று நாமேன் கொள்ளுதல் கூடாது? ஒரு பாசுரத்தை எடுத்துக்கொண்டால் அதனுட் செறிந்து கிடக்கும் பொருண்மை முழுமையும் ஒப்புக்கொள்ள வேண்டியது, போறிஞர் தம் பெரியதோர் கடைமைகளிலொன்று மென்க. அம் முறையை யொட்டியும் அம் மெய்யன்பர் தம் கருத்தினைத் தழுவியும் நுணுகி ஆராயுமிடத்து 'துறக்குமா சொலாய்' என்ற தேவாரத்தில் திருஞானசம்பந்தர் தான் பிறந்ததைக் குறித்து 'பிறக்குமாறு காட்டினாய்' என்று பாடி வருந்தினரென்றால், அத்தேவாரத்தி னிறுதியிலேயே 'பிணிபடு முடம்புவிட் டிறக்குமாறு காட்டினாய்க்கு' என்று தாம் இறக்கப்போவதைக் குறித்து எண்ணி எண்ணி வருந்தினர் என்று சொல்லவேண்டியதாகிறது. ஓர் காலத்தில் பிறப்புண்டேல் மற்றோர் காலத்தில் இறப்புண்டு என்ற கொள்கையின்படி திருஞானசம்பந்தர் பிறந்தமையை நோக்கின் அவர் தாம் தேவாரத்தி லருளியவிதமாக இறந்திருக்க வேண்டுமென்று கொள்ளவேண்டு மல்லவா! திருஞானசம்பந்தர் தமது பிணிபடு முடம்புவிட் டிறந்த வழக்கொன்றாகிய அதுவுங்கூட நமது அன்பருக்கு எடுத்துக்காட்ட இயலும்போலும். அற்றன்று: திருஞானசம்பந்தர் இறந்தாரென்று நான் சொல்லவரவில்லையென்று கூறுவாரானால், அவ்வாசிரியர்சோன் பிறந்தமைக்கு மாத்திரம் அத் தேவாரத்தை எடுத்துக்காட்டுவது எத் தகுதியைக் கருதியோ யாமறிகிலோம். உலகிடை எம்போலியர்கள் பிறப்பிறப்பெனுஞ் சுழலுட்குட்பட்டு அல்லலுறுவதைக் கண்ணுற்று அன்னவர்கள் அதனின்று விடுதலையடையவேண்டும் என்று கருதி அதைத் தன்பாலேற்றி இளைய பிள்ளையார் வழிபடுவாராரென்க.

'மண்ணினை வானவ ரோடு மனிதர்க்கும்
கண்ணினைக் கண்ணனும் நான்முகனுங் காணா



விண்ணினை விண்ணவர் தாம்தொழும் வெண்ணியில்
அண்ணலை அடையவல் லார்க்கில்லை அல்லலே,

என்ற திருவெண்ணியூர்த் தேவாரத்தில் 'மனிதர்க்கும் கண்ணினை' என்று படர்க்கைப்பட பரமனைப் பாடப்பட்டிருப்பதை நோக்கின், புகலிவேந்தர் 'மையல் மானுட'ராகப் பிறந்தார் என்னும் கூற்று பாழ்படுமாறு காண்க. இன்னும் ஆளுடையபிள்ளையார் தாமருளிய தேவாரத் திருப்பதிகங்கள் முழுமையும் நன்கு ஆராய்ந்துகொண்டுவந்தால் எம் போன்ற மக்கள் உய்வதற்குரித்தான மார்க்கங்களை எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் தேவாரங்களே மலிந்து காணப்படுமா றறிக.

திருஞானசம்பந்தர் 'துறக்குமாசொலாய்' என்ற இந்த ஒரு இடத்தைத் தவிர வேறெந்த விடத்திலாவது உபசாரமாகவேனும் குறைத்துக் கூறியுள்ளாரா? என்பது திரு. செட்டியார் அவர்களின் இரண்டாவது வாதம்.

'நல்குர வென்னை நீக்கும்ஆவி யந்தணர்'

'செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னு தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமான் ஒளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே'

'ஒல்லை யாறி உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய
சொல்லை யாறித் தூய்மை செய்து காமவினை யகற்றி'

'மறக்கும் மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்தி'

'நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னுஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்'

'நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே'

'தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே.

என்பனபோன்ற தேவாரங்களில் ஆளுடையபிள்ளையார் தம்மைக் குறைத்துக்கூறிக் கொள்வதை யானறிந்திருக்க மாட்டேன் என்று எனது நண்பர் எண்ணினார் போலும்.

பிறப்பில்லாத முழுமுதற் கடவுளாகிய சண்முகர் பகவதியார் மணி வயிற்றினிடமாக திருஞானசம்பந்தராகப் பிறந்தார் என்று கூறுவது சைவசித்தாந்த சாஸ்திரத்திற்கு முரண்படுவதாயிருக்கின்றன என்பது நமது அன்பரின் மூன்றாவது வாதம். சண்முகரான திருஞானசம்பந்தர் கருப்பவாசம் செய்து பிறந்தார் என்று கூறினால், அது பெரியதோர் இழுக்காய் முடியும் என்பது உண்மையே. ஆளுடையபிள்ளையார் நம்போன்று யோனிவாய்ப்பட்டுப் பிறந்தார் என்பதற்குத் தகுந்த

ஆதாரம் திருத்தொண்டர் புராணத்திலேயே காணப்பெறுதென்றால் வேறெங்குக் காணக்கிடைக்குமோ? யாமறிகிலோம்.

'கருத்துமுடிந் திடப்பரவுங் காதலியார் மணிவயிற்றி
லுருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாக.'

என்பதில் 'மணிவயிற்றில் உருத்தெரியவரும் பெரும்பேறு' என்றிருத்தலினால், திருஞானசம்பந்தர் பிறந்தார் என்று உயர்திரு நாவலரவர்களும், திரு. செட்டியாரவர்களும் கூறி இடர்ப்படுகின்றனர். அப்புராண முழுமையும் செவ்வனே ஆராய்வார்க்குச் சேக்கிழார் பெருமான் எக்கருத்தை நோக்கி அவ்வடியை அமைத்துப் பாடியிருக்கிறார் என்பது நன்கு புலனாகும். திருஞானசம்பந்தர் புராணத்தைப் பாடவந்த சேக்கிழார் பெருமான் முதன் முதலில் எம்போன்ற மக்கள் மயங்குறாதிருப்பதற்காகத் திருஞானசம்பந்தர் இந்நிலவுலகில் தோன்றிய காரணத்தை,

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம்பரை பொலிய.........'

என்ற பாட்டில் எடுத்துக்காட்டி அறிவுறுத்துவாரானார்.

'மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
யாதியரு மறைவழக்க மருகியா னடியார்பாற்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தார்'

என்றவாறு அக்காலத்தில் சமணசமய யிருள்மூடி சைவத் திருநீற்றி னொளி மழுங்கியிருந்ததைக் கண்டு மனம் புழுங்கிய சிவபாதவிருதயர் 'பரசமய நிருக்கும் புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுதவம்' புரிந்தார். அவரது பத்தினியாரும் அவரது கருத்து முடிந்திட இறைவனைப் பரவினார். இல்வாழ்க்கையி லீடுபட்ட இருவரும் கருத்துடன் பொது நலத்திற்காகப் புத்திரப்பேறு வேண்டித் தவங்குயிற்றினமையால் அன்னவர்களுக்கு மனத்திருப்தி யுண்டாகவும் உலகியலொழுக்கம் குறைவுறாதிருக்கவுமே அவ்வாறு பகவதியார் மணிவயிற்றினிடமாகக் கர்ப்பக்குறிகள் காணுமாறு இறைவன் அருளிச்செய்தானேயொழிய, உண்மையில் யோனிவாய்ப்பட்டுப் பிறந்தாரெனல் பொருந்தாதென்க. அவ்விதம் திருஞானசம்பந்தர் பிறந்ததுண்மையெனில், சேக்கிழார் பெருமான் கண்ணப்பநாயனார் புராணத்தில்,

'பான்மதி புவரி யீன்றா லெனமகப் பயந்த போது'

என்று கண்ணப்ப நாயனார் பிறந்ததை ஒப்புக்கொண்டதுபோலவும், சண்டேசுரநாயனார் புராணத்தில்,



'வென்றி விளங்க வந்து உதயஞ் செய்தார் விசார சருமனார்'

என்பதில், சண்டேசுரநாயனார் உதித்தார் என்று சொன்னது போலவும், காரைக்காலம்மையார் புராணத்தில்,

'பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்'

என்பதில், புனிதவதியார் பிறந்தார் என்று அருளினது போலவும், திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்,

'திகழவரு திருவனைய திலகவதியார் பிறந்தார்'

என்பதில், திலகவதியார் பிறந்தார் என்று கூறினதுபோலவும் அருளாமல், திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் அச்சிரபுரத்து வள்ளலார் தோன்றுவதற்குரிய காரணங்களை யெல்லாம் குறித்துக்கொண்டே வந்து இறுதியில்,

'சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார்'

என்பதில், திருஞானசம்பந்தர் பிறந்தார், உதயஞ் செய்தார் என்பன போன்ற வார்த்தைகளினால் கூறாது, திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தார் என்று திருவாய் மலர்ந்ததிலிருக்க, நம்போன்று திருஞானசம்பந்தர் பிறந்தார் என்ற கொள்கையைச் சேக்கிழார் பெருமானும் மறைமுகமாக ஒப்புக்கொண்டாரில்லை என்று நன்கு புலனாவதறிக. அஃதல்லாமல், திருஞானசம்பந்தருக்கு உபநயனச் சடங்கு நடத்திவைக்கப்படுந் தறுவாயில் சேக்கிழார் பெருமான்,

'ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை யுலகியல்பி னுபநயன
முறைமை யாகு, மிருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி யெய்து
விக்கு மறைமுனிவ ரெதிரே நின்று, வருதிறத்தின் மறைநான்குந் தந்
தோமென்று மந்திரங்கண் மொழிந்தவர்க்கு மதுர வாக்காற், பொரு
விறப்ப வோதினார் புகலிவந்த புண்ணியனா ரெண்ணிறந்த புனித வேதம்'

என்பதில் திருஞானசம்பந்தரை, 'ஒருபிறப்புமெய்தாமையுடையார் தம்மை' என்று மக்கள் மயங்குறாவண்ணம் வெள்ளிடை வெற்பென எடுத்துக்காட்டியவாறு அறிக. இதனால், திருஞானசம்பந்தர், 'மையல் மானுடராகப் பிறந்தாரில்லை' என்பது தெற்றென விளங்குகிறதல்லவா?

இனி, திருஞானசம்பந்தர் சண்முகரே என கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், முருகனருள் பரிபூரணமாகப் பெற்ற அருணகிரிநாதர், சகலகலாவல்லவராகிய சிதம்பரசுவாமிகள் அருளுவதை நம் அன்பர் உபசாரமெனக் கூறி யாதாமொரு காரணமும் காட்டாமல் ஒதுக்குவாரானார். உபசாரம் என்ற சொற்பிரயோகத்திற்குரிய பொருளை அதை எடுத்தாளுமுன் நன்கு சிந்திக்கவேண்டும். ஒருவரிடத்தில் அமையக்கூடாத குணங்களைக் கொண்டு அவரிடத்தில் தமக்கு ஏதாவதொன்று விழைய

என்றருளல் வேண்டியதை வேண்டியாங்கு அருளிய அன்னவரைப் பரிபலவிதமாகப் புனைந்துரைத்தலே உபசாரம் என்பது. சிதம்பரசுவாமிகள்.

'வனைத்தமிழ்க் காழிமேவி'............

எட்டிணையு மறிவரு மனந்தசீ வரைவதனை
யென்றுபெய ரிட்டழைத்தங்
கிரும்புண்ட நீரிற் றிரும்பாத வீடுதரு மினியதவு
ணியர்விளக்கே!
இட்டமொடு வாமுதவு சமரபுரி முருகவேள்
சிறுபறை முழக்கியருளே' என்றும்,

'காழியிலே வந்து கணக்கிலாச் சீவரைநீ
டூழியின்பத் துய்த்த வொருவனே—யாழியெனுந்
துன்பத் திருந்தேனைத் தூக்கித்தென் போரூரா!
வின்பத்துள் வைப்பா யினி'

என்றும் அருளிய பாசுரங்களில் ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியமேனும் உபசாரமாக அமைக்கப்பட்டிருக்கின்றதா என்பது செற்ற மனநீக்கிக் காண்பார்க்கு நன்கு புலப்படுமாறறிக. திருமணத்தின்போது தரிசனார்த்தமாக வந்திருந்த அறிவரிய அனந்தசீவரை முத்தியிற் கூட்டுவிக்கும் தகைமைவாய்க்கப் பெறுவது முழுமுதற்கடவுளுக்கே யன்றி தேவர்களுக்காயினும் முனிவரர்களுக்காயினும் நரர்களுக்காயினும் கனவிலேனும் இயலாமையை நோக்கியும்,

'ஆதி நாயகன் கருணையா யமலமாய்ப் பரம
போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபா
லேதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றக்
காதன் மாமகற் கன்பினு லருத்தினுள் கௌரி'

என்று கந்தபுராணம் உற்பத்தி காண்டம் சரவணப்படலம் 23ம் பாட்டில், சரவணப் பொய்கையில் கார்த்திகை மாதர்களிடமாகத் தவழும் ஆறு திருவுருவங்களை ஆர்வமீதூர அகிலாண்டநாயகி ஒன்று சேர்த்து அணைத்து திருமுலைப்பா லூட்டினுள் என்று காணப்படுமாறு போல, ஈண்டு ஆளுடைய பிள்ளையார் தேவியார்தம் திருமுலைப்பாலை யூட்ட யுண்டருளினமையைக் கருதியும், சிதம்பரசுவாமிகள் சம்பந்தர் சண்முகரே என்று சிறப்புப்பட ஓதுவாராஞர். இதுபோன்று பல இடங்களில் அவர்பாடியிருக்கின்ற தன்மையை ஆழ்ந்து நோக்கின் அவைகள் யாவும் உபசாரமாகக்கொள்ள நியாயமில்லை என்பது தெள்ளிதிற் புலப்படாநிற்கும்.



அருண்மொழித் தேவர், 'புரமெரித்தார் திருமகனுர்' 'செய்ய மேனியர் திருமகனுர்' என்ற தொடக்கத்தான் பலவிடங்களில் பெரிய புராணத்தில் ஞானசம்பந்தரைக் கூறியவெல்லாம், திருத்தோணி வீற்றிருந்த சிவபிரான் திருவருளால் பெரிய நாயகியார் திருமுலைப்பால் ஞானவடிசி லூட்டியருள வுண்டு ஆளுடைய பிள்ளையாராயினமைபற்றியேயாம். திருச்சேய்ஞலூர் எச்சதத்தர் குமாரர் தாதை சிவாபராதங் கண்டு அவனைத் தாளறவீசிய காரணத்தானே, சிவபிரான அவரை யங்நிலையில் ஆண்டு பிள்ளையாராக்கியது போல,கவுணியர் தலைவராய் உதித்த பிள்ளையாரது முன்னிலைமைத் திருத்தொண்டு முதன்மைபற்றி அவருக்கு ஞானப்பா லூட்டுவித்து ஞானசம்பந்தராக்கி ஆளுடையபிள்ளையாராக்கியருளினுர் என்று திரு நாவலரவர்களால் எழுதப்பெற்றிருக்கும் திராவிடப் பிரகாசிகையைத் தமக்காதாரவாகக் கொள்ளும் திரு.செட்டியாரவர்கள் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தரைச் சிவஞானப்பா லூட்டுவித்துப் பிள்ளையாராக்கினமையைக் கருதி'திரிபுரமெரித்த திருமகனுர்' என்பனபோன்ற சொற்களைப் பிரயோகித்தார் என்று கூறுவாராகில், சிவாபராதங் காரணமாகத் தன்தாதை தாளறவீசிய விசார சருமரையும் ஒரு பிள்ளையாராகச் செய்ததையைக் கருதி,சேக்கிழார் பெருமான் சண்டேசுரநாயனுர் புராணத்தில் எவ்விடத்திலாவது உபசாரமாகவேனும் திருஞானசம்பந்தரை அழைத்ததுபோல அருளியிருக்கவேண்டுமல்லவா? அவ்வாறு காணப்படாமையால் திருஞானசம்பந்தர் குமாரஸ்வாமி யென அருண்மொழித் தேவரின் உண்மைக் கருத்தாமென்க.

ஆளுடைய பிள்ளையார் என்றது ஆளப்படுதலை யுடைய பிள்ளையாரென்று விரிக்கப்படும். ஆளப்படுதலாவது பண்டைப் பேதநிலை விண்டொழியுமாறு பாஞானத்தால் ஒற்றுமை செய்யப்படுதல் என்று திரு. நாவலரவர்கள் கூறியதைத்தழுவி யாமும் கூறுவோமாகில்,அருண்மொழித்தேவரால் அருளிச்செய்யப்பட்ட அந்தப்பெரியபுராணத்தில் காணப்படும் 'ஆளுடையா ளுடன்றேணி யமர்ந்தபிரானருள் போற்றி' என்பதில் பெரிய நாயகியாரை ஆளுடையாள் என்று கூறுவதால் இந்த இடத்தில் ஆளுடைய பிள்ளையார் என்பதற்குத் திரு. நாவலரவர்களின் உரையைக்கொண்டு நோக்குவோமானுல் சைவத்திற்கும் சைவசித்தாந்த சாஸ்திரக் கருத்துக்கும் முரணேற்படும் என்பதை எனது நண்பர் நன்கு உய்த்துணர்வாராக. ஆகவே, திருஞானசம்பந்த நாயனுர் புராணத்தின் இறுதியிலேயும் இடையிலேயும்,

'தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்' என்றும்,

'ஞால முய்ந்திட ஞானமுண்டவர்' என்றும்,

'இந்த மாநிலத் தின்னிரு ணீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்' என்றும்,

'தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
யிருளு நீங்கவு மெழுதுசொன் மறையளிப் பவர்தாம்
பொருளு ஞானமும் போகமும் போற்றியென் பாருக்
கருளு மங்கணர்' என்றும்,

'ஆளு மங்கண ராலவா யமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு' என்றும்,
'தீதகற்றுஞ் செய்கையினர் சின்னுளங் கமர்ந்தருளி'

என்றும், இன்னோரன்ன பல விடங்களில் காணப்படுகின்ற தன்மையை நோக்கினுல், பூதிசாதன நெறிநீங்கிப் பாசமயப் படுகுழியில் ஆழ்ந்திருக்கும் மக்களை யுய்வித்து ஆட்கொள்ளும் தன்மையையுடைய பிள்ளையார் என்பதே அருண் மொழித்தேவர் கொண்ட கருத்தாமென்க. இதுபற்றியே, கல்வி செல்வவளமொருங்கே பெற்றவராயும், மூச்சோழர் காலத்திலே வேத்தவைப் புலவராயிருந்தவராயுமுள்ள கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெருமானும் திருஞான சம்பந்தரை நோக்கி,

'ஏயே யிமவான் மகளார் மகனே!
யெந்தாய் சிந்தா குலம்வே ரரியுஞ்
சேயே வாசை வசிகா மணியே!
திருநீ றினியிட் டருள்செய் கெனவே'

என்பதில், எனது பிறவித்துய ரொழிய விபூதியளித்து ஆட்கொளுவாய் என்று தாம் பாடிய தக்கயாகப் பரணியில் கூறிப்போந்தவா றுணர்க. அஃதன்றி, அப்பெரியார் அப்பாசுரத்தின் திருஞானசம்பந்தரைச் 'சைவ சிகாமணியே' என்று சிறப்புப்பட ஓதுகின்றவாறு காண்க. அக்கருத்துத் தழுவியே 'இன்னருள்சேர் சைவசிகாமணியே' என்று திருவிளையாடற் புராணத்திலேயும், 'மொழிவது சைவசிகாமணி மூரித்தடவரைத்தோள்' என்று ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியிலேயும், 'கண்ட சைவசிகாமணி' என்று திருச்சண்பைத் திருவிருத்தத்திலேயும், 'சைவசிகாமணி சம்பந்தன்' என்று ஆளுடைய பிள்ளையார் மும்மணிக் கோவையிலேயும், 'மிம்மறை நாவளர் சைவசிகாமணி' என்று ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்திலேயும், இன்னன பல நூல்களிலேயும் ஆளப்படுமாறுகாண்க.

பரந்தெழுந்ததாயும் வன்மை பெற்றதாயும் சமயங்களுக்கெல்லாம் மேலான சமயமென்று மக்கள் பல்லோரால் வெகு தீவிரமாகக் கொண்டாடப்பெற்றதாயும் அரசால் பரிபாலிக்கப்பட்டதாயுமுள்ள பாசமயமாகிய சமணசமயக் களையை நீக்கவும், சைவசமய நற்பயிர் தழைக்கச் செய்யவுமுரிய வரம்பிலாற்றலுடைமை, எம்மிறைவன் திருஞானசம்பந்தருக்கே வாய்க்கப்பெற்றதை நோக்கின், வல்லசுரர்மாய்த்து நல்லசுரர்களை விண்குடி யேற்றியவராயும், பரமனுக்குப் பிரணவமந்திரோபதேசஞ்



செய்தவராயுமுள்ள ஞானபண்டித சுவாமி சண்முகருக்கே சமயவாதிகளை வெல்லுதலும் ஞானகுருவாம் தன்மையெய்துதலும் கூடுமென்பது நமக்குத் தெற்றென விளங்குகின்றதல்லவா? இக்கருத்தையே பண்டுமுதல் முருகனையே வழிபடும் குலத்திலுதித்தவரும் முருகனருள் பரிபூரணமாகப் பெற்றவருமாயுள்ள அருணகிரிநாதர்,

'பொறியுடைச் செழியன்வெப் பொழிதரப் பறிதலைப்
பொறியிலிச் சமணரைத் தலைபெறும்,
பொடிபடச் சிவகணப் பொடிபரப் பியதிருப் புகலியிற்
கவுணியப் புலவோனே!' என்றும்,

'புழுகொழுகு காழி கவுணியரின் ஞான புனிதனென வேடு தமிழாலே, புனல்மிலேதிரேற வமணர்கழு வேற வாதுபொருத வீர—குருநாதா!' என்றும்,

'பாலறுத் திருவாயா லோதிய வேடுநீர்க் கெதிர்போயே வாதுசெய்
பாடறுற் றிடுமோலா மாயிர—சமண்மூடர்,
பாரின்மேற் கழுமீதே யேறிட, நீறிடாத் தமிழ்நாடு டேறிடப்
பாதகாத் தருளாலே கூனிமி—றிறையோனும்,
ஞாலமேத் தியதோர்மா தேவியு மாலவாய்ப் பதிவாழ்மா மாறனு
ஞானபாக் கியபாலா வேலவ—மயில்வீரா!'

என்றும் இதேவிதமாகப் பலவிடங்களில் அருளிப் போந்தவாறறிக.

இன்னும், திருக்காளத்தியில் கண்ணப்பநாயனார் திருவுருக்கண்டு வணங்குதலும், காரைக்காலம்மையார் திருத்தலையாலடைந்த திருப்பதியாமென்று திருவாலங்காட்டினை மிதிப்பவஞ்சி யொதுங்குதலும் என்று இன்னனபலவும்கூறி, இதனால் அடிமைத்திறம் பூண்டொழுகும் ஆளுடையபிள்ளையார் அபர சுப்பிரமணியரென்பதைத் தெள்ளிதிற் புலப்படுத்துமென்று திரு. நாவலரவர்கள் கூற்றைத் தமக்காதாரவாக எடுத்துக்காட்டும் திரு. செட்டியாரவர்கள், 'அரவகலல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு, தருவ மென்று அளவில் வேதம் சாற்றிய தலைவன்' நம் சுந்தரனுக்காகப் பரிவுற்று பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதகண் படுக்கும் பானுளிரவினில்' தூது வேலை யாகிய இழிதொழில் புரிதலும், அரிமர்த்தன பாண்டியரும் அர்ச்சுனனும் மூறைமீய பிரம்பாலும் வில்லாலும் அடிக்க ஏற்றுக்கொள்ளுதலும், வந்தியின்பால் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமத்தலும், நினைத்தவளவில் அழிக்கக்கூடிய சண்முகன் சூரனைச் சமன் நிலைப்படுத்தி படைகொண்டு போர்புரிதலும், இன்னோரன்ன பிறவும் காணின் கடவுட்குரிய குணங்களுக்குத் தகாதனவாக முடிவதை அறிந்திலர்போலும். எனவே, மேற்கூறிய அடிமை பக்தி தொண்டுகளைத் திருஞானசம்பந்தர் தமபால் ஏற்றுக்கொண்டது அசிரத்தை அயர்ச்சி அவநம்பிக்கையாகிய மூன்றும் குடிகொண்ட எம்போல்வார்க்குக் காட்டும் பொருட்டேயா மென்க.

186919

முடிந்தது முடித்தலாக — திருஞானசம்பந்தர் 'யோனிவாய்ப்பட்டுப் பிறக்கவில்லை' என்றும், மக்களுக்கு இரும்புண்டநீர் திரும்பாத வீட்டையளித்து ஆளுந்தகைமை இப்பிறவியிலேயே அமையப்பெற்றவரென்றும், தன்னைக் குறைத்துக் கூறிக் கொண்டமையும் அடிமைத் திருத்தொண்டு பூண்டமையும் மேனிலையை யடைய விரும்புபவர் தாழ்வை அல்லது பணிவையே விரும்புதல் வேண்டுமென்பது போன்ற பல அரிய ஒழுக்கங்களை நமக்குக் கற்பிக்கும் பொருட்டுத் தனக்குத்தானே காட்டி மக்கட்கு உபகரித்தாலல்லாமல் நாம் உய்வது கூடாமை கருதி அவ்வாறு அருளினரென்றும், அறநெறி பிறழ்ந்த சூர்குடியை முதலறக் களைந்த சண்முகனே பரந்தெழுந்த சமணர்களை நீக்கத் திருஞானசம்பந்தர் என்ற நாமங்கொண்டு திருவவதாரஞ் செய்தாரென்றும் இதுவரைக் கூறினேம்.

விரிவஞ்சி இம்மட்டுடன் இக்கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறோம்.

திருஞானசம்பந்தர் திருவடிவாழ்க.

---

# சாதிபேதம்.

மக்களுட் சாதிபேத முண்மையை யறிந்துகொண்ட சமூகங்கள் பல. அவற்றுள் வைதிக சைவமும் ஒன்று. 'நலத்தின்கணாரின்மை தோன்றினவனைக், குலத்தின்கணையப் படும்', 'பார்ப்பான் பிறப்பு', 'குலம் பொல்லேன்', 'சாதிநெறி தப்பிடினும்', 'வேளாளரென்பவர்கள்', 'திருநீலகண்டத்துக் குயவனார்', 'இன்னல்தரு மிழிபிறவி', 'புலையரேனும்', 'குலத்தளவேயாகுங் குணம்', 'நாற்பாற் குலம்' என்பன அச் சமூகப் பெரியாருட் சிலர் வாக்கு. அச் சமூகத்திற் சாதி பரம்பரையாசாரம். அப் பாரம்பரியமும் அவ் வாக்குப் போன்று சாதி யுண்டென்பதை நன்கு விளக்கும்.

குயவன் செய்வது ஆக்கல், தடியன் செய்வது அழித்தல். உழைப்பு முந்தியவனுக் கதிகம், பிந்தியவனுக்குக் கொஞ்சம். 'குயவனுக்குப் பலநாள் வேலை; தடியனுக்கு நொடிப்பொழுது வேலை' என்பது பழமொழி. ஆனால், இறுதியில் தடியன்கருத்துச் சிறிது முடியுமாறில்லை. அவன் எவ்வளவு சட்டிபானைகளை அடித்துடைத்தாலும் அவைகளில்லாதகாலம் என்றுங் கிடையாது. [illegible]னை யொழிப்பதற்கென்று பலர் அவ்



வப்போது தோன்றினர். அச் சங்கற்பங்களெல்லாம் பயங்கரமாகவு மிருந்தன. ஆனால், குலாலனன்ன அச் சமூகப் பூர்வீகர் அக்காலங்களில் தம் புலமையுங் கொடுத்து அவ் வாசாரத்தைப் போற்றினர். ஆகலின், சாதி இன்னும் நிலைப்பதாயிற்று. அப் பலர்கண்ட பலன்மட்டும் ஏதுமில்லை.

இவ் விருபதாம் நூற்றாண்டிற்கு ஆராய்ச்சிக்காலம் (Age of reason) என்றொரு மதிப்புண்டு. ஆகலின், எவ்வகைத் தடியரும் இக்காலத்தில் தலைமறைந்து வசிக்கவேண்டும். ஆனால், சாதியை யில்லையென்பவர் மட்டும் அவ்வாறு செய்வதில்லை. ஆகலின், சாதியைக் கெடுக்க அவர் பலப்பல பிதற்றி வருகின்றனர். அப் பிதற்றுரைகளை யாராயுமுகத்தால் அவருக்கு அறிவுதீக் கொளுவல் எண்டைக் கவசியமாயிற்று.

பிதற்றுரை 1:—எல்லா மக்களுக்கும் அறிவும் ஒன்றே; ஆக்கையும் ஒன்றே.

அறிவுத்தீ:— ஆலினும் வேலுக்கறிவு அதிகமில்லை. ஆனால், அத்தனை ஓரறிவுயிர்களும் ஆல் வேல் எனவுடலாற் பலபேதமாயின. இப்பியினுஞ் சங்குக்கறிவு ஏற்றமில்லை. ஆனால், அத்தனை ஈரறிவுயிர்களும் இப்பி சங்கு எனவுடலாற் பல பேதமாயின. செல்லினும் எறும்புக்கறிவு சிரேட்டமில்லை. ஆனால், அத்தனை மூவறிவுயிர்களும் செல் எறும்பு எனவுடலாற் பல பேதமாயின. வண்டினுந் தும்பிக்கறிவு வளப்பமில்லை. ஆனால், அத்தனை நாலறிவுயிர்களும் வண்டு தும்பி யெனவுடலாற் பல பேதமாயின. விலங்கினும் பறவைக் கறிவு விசேடமில்லை. ஆனால், அத்தனை ஐயறிவுயிர்களும் விலங்கு பறவை யெனவுடலாற் பல பேதமாயின. அவ் வெல்லாவற்றினும் வேறுபட்டவர் மக்கள். அவருக்கறிவு ஆறு. அந்த ஆறுமறிவு மனிதவுயிர்தோறும் பேதமுறும். இப் பேதஞ் சாமானியமன்று. ஓரறிவுயிர்த் தொகுதிமுதல் ஐயறிவுயிர்த் தொகுதிவரை ஒவ்வொரு தொகுதியிலும் பலவகைப் பிரிவுகளிருக்கின்றன. அப்படியே ஆறறிவுயிர்த் தொகுதியிலும் பிறவிபேதங்களிருக்கத்தான் வேண்டும். ஒன்றுமுதல் ஐந்துவரை ஒவ்வொரு தொகுதியும் ஞானத்தாற் பேதிக்கவில்லை. ஆறறிவுயிர்த் தொகுதி ஞானத்தாலும் பேதித்தது. அபேத ஞானத் தொகுதிகளிலேயே பேதப்பிறவிக ளிருக்கின்றன. பேதஞானத் தொகுதியில் மட்டும் அபேதப் பிறவியே யிருக்குமெனல் யாங்ஙனம்? அவற்றினும் இதிற் பிறவிபேதங்கள் மிகுந்தேயிருக்கும். ஈண்

டிப் பேதமானது புலிக்குஞ் சிங்கத்துக்குமுள்ள பேதம் போல்வது. புலிக்கும் புலிக்குமுள்ள பேதம் போல்வதன்று.

பிதற்றுரை 2:—புலி சிங்கத்தையும் சிங்கம் புலியையும் புணர்வதில்லை. புணர்ந்தா லவை பெருகுஞ்செய்யா. ஆகலின், விலங்குட் சாதி பேதிக்கலாம். ஆனால், ஒருசாதி யாடவன் மற்றொருசாதிப் பெண்டாட்டியைப் புணர்வான்; பேறுமுண்டு. ஆகலின், மக்களுட் சாதி பேதியாது.

அறிவுத்தீ:— நாய் ஐயறிவுயிரில் ஒருவகை. அதிற் பிரிவுகள் பல. அதையெல்லாம் இபற்கை. ஆயினும், ஒருபிரிவு நாய் மற்றொரு பிரிவு நாயைப் புணர்வதுண்டு; பேறுங்கூடும். ஒருசாரார் 'அப்பனுக்கும் மகளுக்கு' இரத்தம் ஒன்று; அவன் அவளைப் புணர்தல் கூடாது; புணரிற் சந்ததி விருத்தியில்லை' யென்பர். ஆகவே, புணர்ச்சி கூடுவதால் விசாதியைச் சசாதி யென்பதும், கூடாமையால் சசாதியை விசாதி யென்பதுந் தப்பு. புலிக்குஞ் சிங்கத்துக்கு முள்ள வித்தியாசம் மிக விசாலம். அவையும் புணர்ந்து பெறலாமெனக் கூறும் விஞ்ஞானிகளு மிருக்கின்றனர். ஒரு பிரிவு நாய்க்கும் மற்றொரு பிரிவு நாய்க்குமுள்ள வித்தியாசங் கொஞ்ச விசாலம். ஒருசாதி மக்கட்கும் மற்றொருசாதி மக்கட்குமுள்ள வித்தியாசம் மிக வொடுக்கம். அற்தற் கருமை நோக்கி அவ் வொடுக்கத்தை யில்லையென்றிடல் பொருந்தாது. மக்களை வானரங்களும் புணர்ந்து பெறுகின்றன வென்பாரு முளர்.

பிதற்றுரை 3:—ஒரு சாதி மக்கட்கும் மற்றொரு சாதி மக்கட்கும் பார்வையிற் பேதமில்லை.

அறிவுத்தீ:—பசுவின் பாலும் எருமையின் பாலும் பார்வையிலொன்றே. ஒன்றை மற்றொன்றென வேமாற்றி விற்பவனும் ஏமாறிவாங்குபவனும் இன்றும் இல்லாமற்போகவில்லை; ஆகவே, வித்தியாசம் வெளிப்படத் தோன்றாதது பற்றி மக்களுட் பேதசாதி யில்லையெனல் பிழை. பரம்பரை யாசாரங்களையுஞ் சாத்திரங்களையுஞ் சாதிப் பகைஞர் ஒழிக்க முயல்வதேன்? அவை யொழியவுஞ் செய்யா. சாதியுண்மை தெரியாமலும் போகாது. மங்கோலியன், காகேசியன், ஆரியன், நிகிரோவன் முதலிய பேதங்கள் எல்லார்க்கும் வெளி. மங்கோலியனைச் சப்பை மூக்கனும், நிகிரோவனைத் தடித்த வுதடனுமாக்கின அவ்வத் தேசமன்று. இன்னும், கலப்பு மணம் சந்ததி



விருத்திக்குப் பெரிது முபகரிக்கு மென்பர் சிலர். சாதியிற் பேதமின்றேல் மணத்திற் கலப்புமில்லை.

பிதற்றுரை 4:—எல்லா மக்கட்கும் இன்பமுந் துன்பமும் ஒன்றே. ஆகலின், மக்களுட் சாதிபேதங் கிடையாது.

அறிவுத்தீ:—இன்பத்துன்ப நுகர்ச்சி ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்வரை எல்லா வுயிர்களுக்கும் பொது. ஆகலின், மக்களுட் பிறவி பேதமில்லை யென்பதை அது சிறிதும் நிரூபியாது. கழுதைக்கும் மனிதனுக்கும் பிறவி பேதமில்லை யென்றும் அதைக்கொண்டே சொல்லலாம்.

பிதற்றுரை 5:—சாதி உலகெங்குமில்லை; இந்தியாவில் மட்டுமிருக்கின்றது. அது மக்கட் கியல்பாயின் எங்கு மிருக்கவேண்டும்.

அறிவுத்தீ:—இந்தியாவும் உலகிலடங்கியதே. ஆகலின், சாதி இந்தியாவி லுண்டென்பதிலும் உலகிலுண்டென்பதே பொருத்தம். தம்முட் பேதமில்லாத கூட்டம் எத்தேசங்களிலிருந்தாலும் ஒரு சாதிதான். ஆகவே, உலகெங்குமே சாதியுண்டு. இன்னும் வேறெங்குஞ் சாதியில்லை யெனக் கொண்டதனாலேயே, இந்தியாவிலிருக்குஞ் சாதி பொய்யாகமாட்டாது. உலகப் பொருள்களில் எங்குமுள்ள வொன்று எதுவுமில்லை.

பிதற்றுரை 6:—இந்தியா அடிமைநாடா யிருப்பதற்குச் சாதி வித்தியாசமே காரணம்.

அறிவுத்தீ:—இந்தியா முதன்முதல் தன்னரசை வகித்திருந்தது. அவ் வரசுக்குச் சாதியாசார மதிகம். அப்பால் புத்தம், சைனம், இசுலாம் முதலிய ராஜ்யங்கள் தோன்றின. அவற்றிற்குச் சாதியில் வெறுப்பதிகம். அவ்விருவகை யரசுகளும் போனவிடம் புல் முளைத்தது. ஆனால், சாதி இன்னுமிருந்து வருகின்றது. ஆகவே, அரசின் ஆக்க அழிவுகட்குச் சாதி காரணமாகாது.. ஆமெனின், காங்கிரசு இப்போதே தன்னரசு பெற வுழைக்கவேண்டாம்.

பிதற்றுரை 7:—சாதிபேதம் மக்களுக்குள் ஒற்றுமையைக் கெடுத்து வேற்றுமையை யுண்டாக்குகின்றது.

அறிவுத்தீ:—உலகமே பேதமயம். அதனை யொருமைப் படுத்துவது குறிக்கோள். ஆண் பெண் என்பன பேதம், இன்பம் பிள்ளையென்பன குறிக்கோள். தாவரம் மனிதனென்பன பேதம். கரியமல வாயுவை யேற்றுப் பிராணவாயுவைத் தள்ளலும், பிராணவாயுவை யேற்றுக் கரியமல வாயுவைத் தள்ளலுஞ் செய்து இரு பேதமுஞ் செழித்தல் குறிக்கோள். அவ்

...வும் இக்கூதல் [illegible] கொள்ளப்பற்றித் தாமுணராதைப் பகுதல் கண்கூடு. [illegible] ஒரு சாதிக்கும் [illegible] குறிக்கோள் பற்றியே இருவேறுபாடுண்டாதல் வல்லது. ஒவ்வொரு சாதியுங் குறிக்கோளை யொரோர் சம்பந்தங் கொண்டிருக்க அவ்வொருமைப்பாடு. அதாவது, குறிக்கோளைக் கருத்தாட் கொண்டிருத்தல். ஆகவே, மக்களுள் ஒற்றுமை கெடுவதற்கும் வேற்றுமை யுண்டாவதற்குங் காரணம் முறையே குறிக்கோ ளறியாமையும், அதன்மட்டியமுமேயாம். சாதியன்று ஈண்டுக் குறிக்கோளென்பது பலசாதிகட்கும் பொதுவாய தொன்று.

பிதற்றுரை 8:—ஒரே சமயத்தை யாசரிப்பவர்களிடஞ் சாதிபேத மெப்படியிருக்கலாம்.

அறிவுத்தீ:—ஓரறிவுயிர்த் தொகுதிமுதல் ஐயறிவுயிர்த் தொகுதியளவும் சமயஞானம் இல்லையாம். ஆறறிவுயிர்த் தொகுதியில் மட்டுமே அஃதுண்டு. ஆகலின், அஃது ஆறுமறிவாகிய பகுத்தறிவு (மனவுணர்ச்சி) பற்றிப் பட்டதாகும். ஆகவே, சமயம் ஞானசம்பந்தம். ஆனால், சாதியோ சரீர சம்பந்தம். ஞானத்தாற் சரீரங் கெடுவதனால் மட்டுஞ் சமயத்தாற் சாதி கெடும். சமயிக்குச் சமயமே குறிக்கோள். சாதிகள் தமக்கெல்லாம் பொதுவாய அதை மதிப்பதால் ஒன்றோடொன்று ஒருமைப்படும். சமயத்தின் வரம்பினையே வேதசிவாகமங்களும், அவற்றின் வழிநூல் சார்பு நூல்களும். ஒருவன் தன் சமயத்திற் சாதியுண்மை யின்மைகளை யறியத் தொடங்குமுன், தன் சமயத்தையும் அதன் பிரமாண சாத்திரங்களையும் இவையென வரைசெய்து கோடல் அவசியம். அச் சமய சாத்திரங்களில் அத்தியந்த விசுவாசமும் அவனுக்கு வேண்டும். அங்கின்றி வட்டாடும் அறியாமை சிறிதுமடாது. பின்னர்த் தான் அவற்றிற் சாதிப்பேச்சுண்டா? இல்லையா? வென வாராய்தல் அவனுக்கு முறை. அவ் வாராய்ச்சியிற் சாதியுண்டெனக் கண்டால் அவன் தன் சாதிவரம்பில் நின்றுகொண்டே தன் சமயத்தை யாசரித்தல் வேண்டும். இல்லையெனக் கண்டால் அவன் அதை விடலாம். அவனது யோக்கியதைக் கதுவே யழகு. பிற சமயிகளின் சகவாச தோஷத்தாலும், உயர் சாதிகளின் மேற்கொண்ட புழுக்கத்தாலும் வசமழிந்தவனே தன் சமய சாத்திரங்களிலுள்ள சாதிப் பிரஸ்தாபத்தை யில்லையெனத் துணிந்து பொய்புரைப்பான். அச் சாத்திரங்களை நிந்திப்பதும் அவனுக்கொருவேலை. அவன் சமயத்தைக் குறியாகக் கொள்ளாதவனாகலின், சாதி பாதை முதலிய



வற்றைப் புகலாகக்கொண்டு அங்ஙனஞ் சண்டையிடலாயினன். ஆனால், சமயமொன்றே யல்லாத தேசத்தையும், பாஷையையும், சாதியையும், உரிமையும் ஒன்றுபடுத்தவல்ல குறிக்கோள். அப் பேதங்களை அஃது இலகாசகட்டுஞ் செய்யாது.

பிதற்றுரை 9:—அறிவு அதிகமுடையவர்களுக்குஞ் சரீரம் பற்றிய சாதி யுயர் விழிவுகள் வேண்டா.

அறிவுத்தீ:—குஷ்டரோகியில் அறிஞருமுளன். அவ்வறிவு அவனுடம்பைப் பெருமைப்படுத்தாது. சுகவாசிகளில் மூடனுமுளன். அம்மூடம் அவனுடம்பைச் சிறுமைப்படுத்தாது. வேசிமகன் எத்துணையறிவு மேம்பாடாயினுங் குலப்பெண்மகனாகான். குலப்பெண்மகன் எத்துணை படிவோனாயினும் வேசிமகனாகான். ஆகவே, சாதியை யறிவு உயர்த்துவதும், அறியாமை தாழ்த்துவதுஞ் சிறிதுமில்லை.

பிதற்றுரை 10:—ஊண் உடை உடல் முதலியவற்றால் சுத்தன் உயர்ந்த சாதி; அசுத்தன் தாழ்ந்த சாதி.

அறிவுத்தீ:—சுத்தாசுத்தங்கள் எல்லாச் சாதிகளிலும் உள. உயர்ந்த சாதிகளிற் சுத்தமும், தாழ்ந்த சாதிகளி லசுத்தமும் அதிகம். அவ்வளவே சுத்தம் நிறைந்த சாதிகளுள்ளும் அசுத்தம் நிறைந்த சாதிகளுள்ளுமே பேதங்கள் பல. ஆகலின், சுத்தாசுத்தங்கள் சாதிவித்தியாசங்களுக்குக் காரணமாகா.

பிதற்றுரை 11:—சாதிகள் தொழில்பற்றியே வகுக்கப்பட்டன.

அறிவுத்தீ:—தொழில்பற்றிச் சாதிகளை வகுப்பது இன்னும் அசாத்தியம். ஆகலின், அஃது அன்று அசாத்தியம். தொழிலைப்பற்றிச் சாதி சிவிக்கவேமாட்டாது. சாதியைப்பற்றித் தான் தொழில் சிவிக்கும். தச்சனுக்குத் தச்சுவேலை யுரியது. ஆனால், தச்சுவேலை செய்பவரெல்லாந் தச்சச் சாதியாராவர். ராமன் சாப்பிட்டான் என்றால் சாப்பிட்டவரெல்லாம் ராமரா?

பிதற்றுரை 12:—உயர்ந்த சாதியானுடலுந் தாழ்ந்தசாதியானுடலும் பஞ்சபூத பரிணாமங்கள். அங்ஙனம் ஒரு மூலத்திலிருந்து உண்டாயினவாகலின், அவ்விருசாதிகளும் வெவ்வேறாதல் பொருந்தாது.

அறிவுத்தீ:—விதைகாரணம். வேர் மரம் கிளை இலை முதலியன காரியங்கள். அக்காரியங்களெல்லாம் விசாதிகள். அவையொவ்வொன்றற்குந் தனிக்குணமுண்டு. ஆகலின், காரணமூ

[illegible] விதையும் காரியங்களாகிய வேர் முதலியனவும் ஒரு தன்மையன வெனும்படி சிறிதும் எலாது. சோறும் பல்லியும் பஞ்சபூத பரிணாமங்கள். தாயினுடலும் மனைவியினுடலும் அப்படியே. மூலம் ஒன்றானதுபற்றி பல்லியைத் தின்று தாயைப் புணர்பவன் எவன்? ஆகவே, காரியங்களைக் காரியங்களோடு இணைத்தே ஆராயவேண்டும். ஒப்புநோக்குக்கு உரியன அவைதான். காரியங்களோடு காரணங்களையும், காரணங்களோடு காரியங்களையும் இணைத்து ஒப்பு நோக்குபவன் ஏமாறவே செய்வான். இக்கால மக்களுட் பலர்க்கு இவ்விபரீத விவகாரந்தான் மிகப்பழக்கம். காரியம் அபேதமாய்க் கொண்டு ஒடுங்கும்போது காரணமாகும். காரணம் பேதமாய்க் கொண்டு விரியும்போது காரியமாகும். எதிர்த்திசைகளை நோக்கிச் செல்லும் இவ்விரண்டும் ஒப்பு நோக்குக்கு எப்படியுதவும்?

பிதற்றுரை 13:—சாதிகளை யழித்து மக்களை யொன்றுபடுத்தும் வேலையை அரசே மேற்கொடல் வேண்டும்.

அறிவுத்தீ:—வாழை, பலா, மா, நாய், ஆ முதலிய விலங்க ளொவ்வொன்றினும் எத்தனை வகைகள். அப்பன்மைகளை இன்மையாக்க எவனாலுமாகாது. அவற்றாற் பெரும்பய னுண்டென்றறிந்தவன் அதிற் பிரவேசிக்கவுமாட்டான். அப்படியே மக்களிற் சாதிகளையும் மாற்றமுடியாது. புத்திசாலி அவ்வேலையினும் பிரவேசிக்கமாட்டான். பௌத்தம், சைனம், இசுலாம் என்னும் அரசுகள் சாதிகளை யொழிக்கப் பகீரதப் பிரயத்தனஞ் செய்துபார்த்தன. கடைசியில் அழிவு அவ்வரசுகளுக்கே வந்தது. இக்காலக் கிறிஸ்தவ அரசும் நாளிதுவரை சாதிகளை யழித்தபாடில்லை. ஆகலின், இனியும் அதற்கு அவ்வன்மை வாராது. சமயவரசுகளுக்கே யில்லாத அந்தச் சக்தி மற்றை யரசுகளுக்கு எப்படியுண்டாகும்? ஒருக்கால் சாதிகளெல்லாம் மறைந்து மக்களெல்லாம் ஒன்றுபடுவதாயிருந்தாலும், அன்றுதான் மக்கட் சமுதாயத்துக்கு நாசகாலம். நாசகாலத்திலன்றி வேறெக்காலத்திற்றான் எல்லாம் ஒன்றுபடும்?

ஏனைய பிதற்றுரைகளுக்கும் இவ்வாறு அறிவுத்தீக் கொளுவி சநாதனமாகிய சாதிகளையும், அவற்றை விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கும் பரம்பரை யாசாரனை சாத்திரமுதலிய சாதனங்களையும் போற்றிக்கோடல் அறிஞர் கடன்.

சைவன்.

---

உ

# தீண்டாதாரின் உண்மைநிலை.

'யாமெய்யாக் கண்டவற்றுளில்லை எனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் வாக்கிற்கிணங்க, எத்துறைகளிலும் மாறுபாடுகள் தோன்றிக் கொண்டிருக்கும் நம தேயத்தில், 'தீண்டாதாரின் உண்மை நிலை யெவ்வாறுளது?' என்பதைச் சற்று பக்ஷபாதமற்ற சரித்திரக்காரர் ஆராயப்புகின் அநேக உண்மைகள் தெள்ளிதிற் புலப்படும்.

ஜனநாயக தத்வத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பெற்ற மானிடர்கள் யாவரும், சிருஷ்டியால் ஒரு தன்மைத்தானவர்கள்; பிறப்பினால் உயர்வு தாழ்வு இருத்தல் கூடாது எனவும், சகோதரத்வம், சமத்வம், கடவுளின ஐக்கிய பத்தியத்தில் பேதமேது? எனவும் வாய்ப்பறையாக மேடைகளில் உண்மைக்கும், இயற்கைக்கும், பழக்க வழக்கங்களுக்கும் விரோதமாகப் பிரசங்கங்கள் செய்தும், பத்திரிகைகளில் எழுதியும், தங்களின் செல்வாக்கையும் அந்தஸ்தையும் குறிக்கோளாகக்கொண்டு, தாங்கள்தான் தீண்டாதாரின் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் போலித் தலைவர்கள், "தீண்டாதாரின் உண்மை நிலைதா னென்னே? சாதி இந்துக்களுக்கும் இவர்களுக்கும் அதிக வித்தியாசமிருப்பதற்குக் காரணந்தானென்னே?" அவர்களது தீண்டாமையை யொழித்து உயர்தர இந்துக்களுடன் சமானமாகக் கொண்டுவருவதற்கு வழிதா னென்னே. என்பனபோன்றவைகளை ஆராய்ந்தறிந்து ஆவன செய்யாது,

தீண்டாதாரின் நலன் உரிமைகளைப் பாராட்டி, அவர்கள்மாட்டு அன்பு பூண்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு ஆடம்பரமற்ற வழிகளில் முன்வந் துழைக்கும் சாதி இந்துக்களுக்கும் தீண்டாதாருக்கும் உள்ள அன்பை அறவே யொழிந்து அவர்களிடை (தீண்டாதாரிடை) துவேஷம் உண்டாக்கும்வண்ணம் சுயநலமிகள் சமத்துவம்-தனித்தொகுதி என்ற பாட்டுகளைப் பிரசங்க மாரியாகப் பொழிந்து வருகின்றனரே யன்றி,

'நாலுவகுப்பு மிங்கொன்றே இந்த நான்கினிலொன்று குறைந்தால், வேலை தவறிச் சிதைந்தே, செத்து வீழ்ந்திடும் மானிடச் சாதி' என்றும், 'அறிவை வளர்த்திடவேண்டும், மக்கள் அத்தனை பேருக்கும் ஒன்றாய், சிறியோரை மேம்படச் செய்தால்,

பிழை தெய்வம் ஒவ்வொன்றையும் வாழ்த்தப்; பசிற்றுக்குச் சோறிட வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம், பயிற்றிப் பல கல்வி தந்து, இந்தப் பாரை யுயர்த்திட வேண்டும்.'

என்று பாரதியாரவர்கள் கூறியவாறே உண்மையில் தீண்டாதாரை வேண்டிய வழிகளில் சீர்திருத்தி அறிவைப் பரவச் செய்யும் வழிகளில் கண்விழித்துப் படி செய்வதே உண்மை அபிமானிகளின் கடமை என்பதை உணர்ந்தனரில்லை.

“சாதி இரண்டொழிய வேறில்லை” எனும் ஒளவைப் பிராட்டியாரின் வாக்கையும் உட்கருத்தையும் சாதி இந்துக்கள் உணராதவர்களல்லர். ஸ்ரீ சங்கர விஜயத்தில் காணப்படும் “மனீஷாபஞ்சகம்” எனும் ஸ்லோகங்கள் இந்துக்களின் உயர்ந்த ஸ்வரூபத்தையும் பரந்த தன்மையையும் காட்டும். காலதேச வர்த்தமானத்தால் ஒடுக்கப்பட்டவர்கள் எனப்படும் தீண்டாதாரின் நடை உடை விவாகம் ஆகாராதிகளால் தங்களைத் தாங்களே வருந்தத்தக்க நிலைக்குத் தாழ்த்திக்கொண்டார்களென்பதே எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

அவர்களது தற்போதுள்ள உண்மைநிலை எத்தன்மைத்தாயது என்று நோக்கப் புகின், கிராமங்களுக்கு அப்புறத்தே நெருங்கிய சுகாதாரமற்ற குச்சுக்களில் வசித்தும் தேகாரோக்கியங்களுக்குமாறாகச் செத்த மாட்டிறைச்சி முதலியவைகளைப் புசித்தும், அறிவை மயக்கி அழிவை யுண்டாக்கும் மதுவைக் குடித்தும், தங்களில் தற்கால நாகரீகம் வாய்க்கப்பெற்ற சில சகோதரர்களாலும் அருவருக்கும்படியான அவ்வளவு கேவல நிலைமையில் ஜீவித்து வருகிறார்கள்.

இவ்வித நிலைமை இன்னும் நீடித்திருக்காவண்ணம் அவர்களது துர்ப்பழக்கவழக்கங்களை அறவே யொழித்துப் பலவழிகளிலும் முன்னேற்றமடைவதற்குத் தக்க கல்வி அறிவு, பணவருவாய் அடைவதற்கு வேண்டிய கைத்தொழிலபிவிர்த்தி முதலிய துறைகளில் ஈடுபடப் பாடுபடுவதே தலைவர்களின் உயர்ந்த லட்சியமும் கடமையுமாகும்.

சாதி இந்துக்கள் என்போருள்ளும் மேற்கண்ட துர்ப்பழக்கவழக்கமுள்ள ஒருவன் வெறுக்கப்பட்டு நிராகரிக்கப்படுகிறானென்பது வெள்ளிடைமலை. அவ்வாறிருக்க, தேகாரோக்கியம் கல்வியறிவு நடை உடை பாவனைகளில் முன்னேற்றமடைந்துள்ள இந்துக்களுக்கு மேற்கண்டவாறு அருவருக்கத்தக்க நிலைமையிலுள்ள தீண்டாதாரைப் பரிசிக்கவோ அல்லது அண்மையில் வரவிடவோ எவ்வாறு இடங்கொடுக்க இயலும்?



மேலும் தீண்டாதார்களுக்கிடையில் பறையன், பள்ளன், சக்கிலியன் எனப் பல வகுப்புகளிருந்து கொண்டிருப்பதில், ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரைத் தொடவோ அவருடன் சமபோஜனம் செய்யவோ சம்பந்தம் செய்துகொள்ளவோ வியலாது வகுப்புத் துவேஷத்துடன் வாழ்ந்துகொண்டும் அடிக்கடி தங்களின் உயர்வு தாழ்வைப்பற்றிச் சண்டையிட்டுக் கொண்டுமிருக்கின்றனர். இதை நேரிற் பார்த்து அனுபவித்தவர்களுக்குத் தான் செவ்வனே புலப்படும். இவர்கள் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள ஜாதிவித்தியாசத்தையும், கெட்ட பழக்க வழக்கங்களையும் அறவே ஒழிக்க முயலாது, திடீரென்று தாங்கள் உயர்தர இந்துக்களுடன் சமமாகப் பாவிக்கப்பட வேண்டுமென்றும், கோவில் குளங்கள் வகையறாக்களில் தாங்கள் யாதொரு தங்குதடையின்றிப் பிரவேசிக்க உரிமை வேண்டுமென்றும், வாயளவிற் பேசிக்கொண்டிருப்பதில் யாதொரு பயனும் காணமுடியாதென்பதை அறிந்தும், அறியாதது போல் சிலரது துவேஷப்பிரசாரத்தால் தூண்டப்பட்டு வீணே ஜாதி ஹிந்துக்கள் பேரில் குறைகூறி சண்டையிடுவதால் தங்களுடைய சமூக முன்னேற்றத்திற்கும் வாழ்விற்கும் பாதகத்தையே தேடிக்கொண்டவராவார்கள் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய மாறுபாடுகளுடன் உண்மையில் கஷ்டப்படும் தீண்டாதாரின் முன்னேற்றத்திற்கு அவர்கள் தலைவர்களின் முயற்சியால் இதுவரை என்னென்ன அபிவிர்த்திகள் செய்யப்பட்டிருக்கிறதென்பதைக் கவனிப்போமானால், காலைமுதல் மாலைவரை பலவகையிலும் பாடுபட்டுத் தேகஉழைப்பால் வரும் சொற்ப வருவாயையும், கள்ளுக்கடை சாராயக்கடை முதலிய கிடங்குகளில் போட்டுவிட்டு ஒருவேளை ஆகாரத்திற்கும் வழியில்லாது பரிதபித்துக் கொண்டிருக்கும் தங்கள் பெண்டுபிள்ளைகளை வாயில் வந்தபடி தூஷித்தும் சண்டைபோட்டும் அடிதடிக்குள்ளாக்குவதைத் தவிர மீளும் வழியைத்தேடினபாடில்லை. ஆனால், முன்போலவே அவர்கள் துர்ப்பழக்க வழக்கங்கள் அறவே ஒழிக்கப்படுவதற்கு வேண்டிய கல்வி அறிவு அபிவிர்த்தியில் சில பட்டணங்களைத் தவிர ஆயிரக்கணக்கான கிராமங்களில் யாதொரு பயன் தரத்தக்க முயற்சியும் செய்யப்படாது பழைய மூடப்பழக்க வழக்கமே குடிகொண்டிருக்கிறது.

உண்மை இவ்வாறிருக்க, சுயகலத்திற்கும் அந்தஸ்து பட்டம் முதலியன பெறுதற்கும் போலிப்பிரசாரம் செய்துவரும் தலைவர்களின் மோசவலைக்குட் சிக்கி தங்கள் வகுப்பினருக்கு என்றுமில்லாத சுதந்திரம் கைகூடி விட்டதாக வாயூறிக்கொண்டிருக்கும் தீண்டாதாரின் பகற் கனவிற்கு விசனப்படுவதா? அல்லது இரங்குவதா?

தங்கள் முன்னேற்றத்திற்கு மனமார்ந்த அபிமானத்துடன் பாடுபட்டுழைத்துவரும் உண்மைத் தலைவர்களைப் பின்பற்றித் தங்களின் முன்னேற்றத்திற்கும் சுயமதிப்பிற்கும் தடையாயுள்ள துர்ப்பழக்க வழக்கங்களை அறவே யொழிக்க அவர்களுடன் ஒத்துழைத்து முன்னேற்றமடைந்தால், யாதொரு பகீரதப் பிரயத்தனமும் துவேஷபுத்தியுமில்லாமலே நாளடைவில் ஜாதி இந்துக்களுடன் சமமாகப் பாவிக்கப்பட்டு அவர்களாலனுபவிக்கப்படும் சகல சுதந்திரங்களையும் அடைதல் கூடும். தீண்டாதார் இவைகளைப் பின்பற்றி நடப்பார்களா? தலைவர்காள்! எழுமின்; விழிமின்; கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின்; எனக் கூறிய ஸ்வாமி விவேகாநந்தரின் திருவாக்கை மனப்பூர்வமாய் உணர்மின்.

சோணாசலன்.

---

## சிவபெருமானை எக்காலமும் தியானித்தல் வேண்டும்.

"அரவினோ டாமையும் பூண்டு வந்துகில் வேங்கை யதளும்
விரவுந் திருமுடி தன்மேல் வெண்டிங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக்கடம் பூரிற் பைங்கண்வெள் ளேற்றண்ணல் பாத
மிரவும் பகலும் பணிய வின்ப நமக்கது வாமே." சம்பந்தர்.

என்னும் வேதசாரமாகிய தேவாரத் திருவாக்கின்படி 'யாரொருவர் நிற்கும்போதும் படுக்கும்போதும் இருக்கும்போதும் நடக்கும்போதும் மற்றெக்காரியங்களைச் செய்யும்போதும் இருதயத்திற் சிவபிரானைச் சிந்திக்கின்றார்களோ, அவர்கள் சகல பாவங்களினின்றும் விடுபட்டுச் சிவபிரானுக்கு அன்பர்களாய்ச் சர்வாபீஷ்டங்களு முடையவர்களாய்த் தேகாந்தத்திற் சிவபிரான் ஆஞ்ஞையினால் அவாறு பரமானந்த நிறைவையுடைய சிவசாருப்பியத்தை அடைகின்றார்கள்.' என்று உபதேச காண்டமும் கூறுகின்றது.

சிவபிரானுக்கு அன்பர்களாய்ச் சர்வாபீஷ்டங்களும் நம் சிவநேயர்கள் அடையும் வண்ணம் ஸ்ரீ நாகாசல வேலவரது சீர்பாத கமலங்களைச் சிந்திக்கின்றனம். (அர்த்தநாரீஸ்வரன்.)

# சபைத்தலைவர் உரை.

நெற்குப்பை ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுவிழா, ஆடி ௩௨௳ தேவகோட்டைத் தாலூகாபோர்டுத் தலைவர் திவான்பகதூர் காரைக்குடி திருவாளர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. தலைவர் முன்னுரையின் சாரம்:—

நமது தாலூகாபோர்டில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அதிக குறையில்லை. மற்ற தாலூகாபோர்டுகளைக்காட்டிலும் நமது போர்டில்தான் சம்பளம் அதிகமாக கொடுக்கப்படுகின்றது. குறைகளும் உடனுக்குடனே தீர்க்கப்பட்டு வருகின்றன. இன்னும் குறைகளிருந்தாலும், நீக்குவதற்கான முயற்சிகளைச் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

சங்கம் பலப்பட வேண்டுமானால், ஆசிரியர்கள் சிறிய வித்தியாசங்களை மேற்கொள்ளாது சிறுவர் கல்வியின்பொருட்டு ஒற்றுமையாக நின்று காரியங்கள் செய்யவேண்டும். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.

சங்கத்தின் மூலமாகச் சாதித்துக்கொள்ளாத காரியமெதுவுமிராது. ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் நிர்வகிக்கப்பட்டுவரும் சங்கமே ஜனநாயக காரியங்களுக்கு அஸ்திவாரமானதால், இச் சங்கத்து எல்லா ஆரம்ப ஆசிரியர்களும் சங்கத்தின் மெம்பர்களாகச் சேர்ந்து அதனால் ஏற்படும் நன்மைகளைப் பெறுவார்களென்று நம்புகிறேன்.

கல்வித்துறையில் நமது தேசம் பிற்போக்கை அடைந்திருப்பது தெரிந்த விஷயம். தேச அபிவிருத்திகளுக்கு அஸ்திவாரம் சிறுவர் சிறுமிகளுக்குப் போதிக்கும் படிப்பேயாகும். நமது சிறுவர்களுக்குப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் மூலாதாரக்கல்வி விஷயமாகக் கல்வியாளர்களும் சர்க்காரும் ஆலோசித்து வருகின்றார்கள். இது பெரிய முக்கிய பிரச்சினையாகும். சிறந்த உபயோகமுள்ள கல்வியே போதிக்கவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. எந்த முறையில் நமது நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு வேண்டிய கல்வித்திட்டத்தை அமைத்தாலும் சரி. நமது நாட்டின் நாகரீகத்திற்கும் பயிற்சிக்கும் ஒவ்வாத முறையில், எந்தக் கல்வித்திட்டத்தை வகுத்தாலும், அது சிறிதும் பயன்படாது. சிறுவர் சிறுமிகளின் மனோபாவத்தை அனுசரித்துத் தேசீய முறையில் அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உபயோகப்படக்கூடிய கல்வியையே போதித்துவரவேண்டும். இந்திய உணர்ச்சிக்கு விரோதமான கல்வியானது நமது இந்திய சமூகவளர்ச்சிக்கு முற்றிலும் விரோதம். அத்தியந்த கடவுட் பக்தியும், தீவிர சுதேச உணர்ச்சியும், சர்க்காரிடம் விசுவாசமும் உள்ள சன்மார்க்க கல்வியைப் புகட்டிவருவதே சாலச் சிறந்தது. ஆரம்ப ஆசிரியர்கள் எவ்வளவுக்கெவ்வளவு சிறு

வர் கல்வி விஷயத்தில் ஊக்கமும் அக்கறையும் நல்லுணர்ச்சியும் காண் பிக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிறுவர்களின் கல்வி போதனையும் நிரம்பவிருக்கும்.

ஆரம்ப ஆசிரியர்களின் பொறுப்பு சாதாரணமானதல்ல. அவர்கள் ஒரு பெரிய தர்மகைங்கரியத்தைச் செய்பவர்களாகவே கருதவேண் டும். ஆரம்ப ஆசிரியர்கள் சிறுவர் சிறுமிகளுக்கு டிரஸ்டிகளென்றே கூறலாம். ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் தம்மிடம் கட[illegible]ால் ஒப் புவிக்கப்பட்ட தர்மகைங்கரியத்தைச் சரிவரச் செய்து, அவரது கிரு பைக்குப் பாத்திரராக வேண்டுமென்ற உணர்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

உபாத்தியாயர்களுக்கிருக்கும் பொறுப்பைக்காட்டிலும், பெற்றோர் களுக்குப் பொறுப்பு அதிகமாகவிருக்கின்றது. சிறுவர்களைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பிவிட்டால் தங் கடமை அஃதுடன் முடிந்துவிட் டதென்று பெற்றோர்கள் நினைப்பது பெருந் தவறு அவர்கள் அடிக்கடி பள்ளிக்கூடங்களுக்குச் சென்று, தங்கள் குழந்தைகள் விஷயமாக ஆசிரி யர்களைக் கண்டு பேசிக் கவனித்துவரவேண்டும்.

குழந்தைகளின் மனோபாவம் தெரியாமல் மாடுகளை அடிப்பது போல் அடித்துச் சொல்லிக்கொடுக்கும் கொடிய பழக்கத்தை ஒழித்து பிரம்பு உபயோகிக்காதபடி குழந்தைகளின் போக்கில் விட்டுச் சொல் லிக்கொடுக்கும் உபாத்தியாயர்கள்தான் உத்தம உபாத்தியாயர்கள். சிறு வர்கள் பலர் தேசப்பொறுப்புகளை ஏற்று, வருங்காலத்தில் பெரிய கல்வி மான்களாகவும், மகா வீரர்களாகவும், பெரிய நன்கொடையாளர்களாக வும் ஆகலாம். ஒவ்வொரு குழந்தையும் நாட்டுக்குப் பெரிய காரியத்தைச் செய்துமுடிக்கப் பிறந்திருக்கிறார்களென்றும், அவர்கள் பெரிய கர்மவீரர் களாக விளங்குவார்களென்றும், பெற்றோர்களும் ஆசிரியர்களும் நினைத் தல் வேண்டும்.

நமது நாட்டுக்கு நற்காலம் பிறந்திருக்கின்றது. கல்வித்துறையில் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு குருகுல வாஸம்போல் விளங்குங்காலம் சமீபித்துவிட்டது. நாட்டுமுறைக்கு ஒத்த கிராம வாழ்க்கையும் கிராம சுகாதாரமும் கிராமக் கல்வியுமே வேண்டப்படுகின்றன. சென்ற வாரத்தில் சென்னை ஸர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின்போது, நமது கல்விமந்திரி அவர்கள் கிராமவாழ்க்கையின் முக்கியத்தைச் சொல் லியிருக்கின்றார்கள். பொதுவாகப் பெரிய அதிகாரிகளும், நாட்டுத்தலை வர்களும் "கிராமங்களுக்குச் செல்லுங்கள்" என்று கோஷிக்கின்றார்கள். நகரவாழ்க்கையைக்காட்டிலும், கிராமவாழ்க்கையே உயர்வானதாகவும் பரிசுத்தமானதாகவுமிருப்பதால், இதை உணர்ந்து கடமைகளைச் செய்ய வேண்டும்.

---



உ

# சிவநேசர் திருக்கூட்டம்.

## ஒன்பதாவதாண்டின் பதினொன்காவது கூட்டம்.

வாழி நான்மறை—வாழி செந்தமிழ்
வாழி வையகம்—வாழி சைவமே.

திருவருளால் விபூதிக்கோயில் திருமுறைகளுடன் விநாயகப்பெரு மானையும், சைவசமய சமயாசாரியர்களாகிய நால்வர் சுவாமிகளையும் எழுந்தருளச் செய்துகொண்டு, திருக்கூட்டத்தார் ஆடி ௨௯ மாலை நெ. இலக்குமி புரத்துக்கு வந்து கூடினர். அவ்வூர் நகரத்தார்கள் ஆர் வத்துடன் வரவேற்று உபசரித்துச் சிவாலயத்தில் அபிஷேக அலங்கார ஆராதனைகளைச் சிறப்புறச் செய்வித்து, பிரதோஷ விநாயகருடன் நால் வர் சுவாமிகளும் எழுந்தருளச்செய்து சிவாலய சேவையைச் செவ்வனே நடத்திவைத்தனர்.

அடுத்தநாள் முற்பகல் பிற்பகல்களில் சிவாலய முகப்பில் கூடினர். சிவநேசச் செல்வர்களான—காரியதரிசி முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியார்—சேவு மெ. மெய்யப்ப செட்டியார்—'சிவநேசன்' இராம சாமி செட்டியார்—ஷண்முகசுவாமிகள்—பொன்னம்பலசிவம் ஆகியவர்கள் சைவசமய விரிவுரைகள் நிகழ்த்தினர். தமிழ்மறைவாணர்கள் இரு தினங்களிலும் தேவாராதி திருப்பாசுரங்களை இசை நலங்கனிய ஓதினர். ஒன்பதாவதாண்டு நிறைவுவிழா, ஒன்பது நகரக்கோயில்களில் ஒன்றாக விளங்கும் வேலன்குடி கோயிலில் ஆவணி ௨௰,௨௧களில் நடைபெறு மெனக் காரியதரிசி அறிவித்தனர். வழக்கம்போல் மணிவாசக சங்கத் துக்கு வந்து, ஆவணி ௨௭,௨௮களில், இருபத்திரண்டாவதாண்டு நிறைவு விழாவை இனிது நடாத்தித்தர வேண்டுமெனத் திருக்கூட்டத்தாரைச் 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் வேண்டிக்கொண்டனர். சிவநே சச் செல்வர்களான பொன்னம்பல சிவம் அவர்களியற்றிய,

"கலைக்கடல் கடந்து கடுமய லென்னுங் கருநெடுங் கடலையுங் கடந்து
நிலைத்தபே ரின்பம் நுகர்ந்திட வேண்டின் நீணில மாந்தர்காள்!வம்மின்
தலத்தினி தோங்குந் தனவணி கேசர் தகுதியாய் வளர்தடம் பொழில்சூழ்
இலக்குமி புரம்வாழ் ஈசனை அன்பர் நேசனை வணங்குவோம் யாமே."

என்னும் செய்யுளும்,

பரிமணங்குடி வித்துவான் திரு. முத்துப்பிள்ளையவர்களியற்றிய,

செங்கமல மலர்வாவி சூழுமிலக் குமிபுரப்பொற் றிருக்கோ விற்கட்
டங்குசிவ கணபதியைத் தாரகமர் திரவடிவாத் தயங்கு சித்தி
யைங்கரனை வல்லபை[illegible]ாகனத்தி னமருங் கோலப்
புங்கவனைப்போற்[illegible]ருளி[illegible]னில்யாம்பொருந்துவாமே

3L
M27SN

மறையாவுந் தேடிப்பெறு வன்றான தும்பை
யறிந்தவுங் கண்டக் கடவு—குறைப்புயிடம்
கொங்கலரு மாலைக் குயிபுராணக் கோவையை
மங்கையுட னென்று மகிழ்ந்து.

அருள்பெருகு சிவநேச ரிணைதாப்பல் வியமாப்ப கமைத்து முக்கட்
குருபானை வலஞ்செய்வித் திலக்குமிமை சுக்ந்தனியிற் கூட்டிச் சைவ
விரிவுரையின் அமுதருத்தி யமராரும் வவிக்கிரு மேமமே வோங்கி
விருத்தியின் ஞானமளவு வாழுமயில் வளர்க்குகலை விளைந்த வாமே.

என்னும் செய்யுட்களும் வழங்கப்பெற்றன. இரு தினங்களிலும் உறைபுளாதிய வுதவி, அறுசுவைத்தாய அமுதருத்தி உபசரித்து, அன்புடன் வந்து இருந்திருந்து, எல்லா வகையாலும் சிறப்புறச் செய்த அவ்வூர் வாத்தாராதிய அனைவர்க்கும் நன்றி கூறப்பெற்றது.

---

## உயிர்களுக்குத் துணை சிவபெருமானே.

நமக்குத் துணையாயுள்ளவர்கள் நமது தாய் தந்தை மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்களே யெனச் சாதாரண அறிவினர் கருதுவர். தாய் தந்தை முதலியவர்களுக்கும் நமக்கும் உண்டான சம்பந்தம் உடம்பு காரணமாக உண்டாயினது. இவ்வுடம்போ நீரிலே உண்டாகின்ற குமிழியைப்போல இக்கணமே நிலைக்குமெனவு அறியவொண்ணாது எப்பொழுதும் அழியுந் தன்மையை யுடையது. இவ்வுடம்பு நீங்கிய காலத்து இதனுடன் தொடர்பும் நீங்கும். ஆகவே, தாய் தந்தை முதலிய சுற்றத்தார் நமக்குத் துணையாவாரென்பது அரியப்படுமே.

மேலும் ஒரோவழித் தாய் தந்தை முதலிய சுற்றத்தார்கள் நமக்குத் துணையாய் நின்று நமக்கு ஆகவேண்டிய உதவிகளைச் செய்வதைக் காணுகின்றோமே யெனின், அவர் அவ்வாறு உதவி செய்தல் தாம் இதனைச் செய்வதால் உலகத்தார் தம்மைப் புகழ்வரென்று கொண்டாதல், தாம் இதனைச் செய்யாதவழி உலகத்தார் தம்மைப் பழிப்பரென்று கொண்டாதல் அன்றித், தம் பயன் கருதாது செய்தல் இல்லாமையால், அவரும் நமக்கு உண்மைத்துணை யாதலில்லை.

ஆகவே நமக்கு உண்மைத் துணையாய், கிடைத்தற்கு அரிய துணையாய், பெருந்துணையாயுள்ளவர் யாவரெனின், நாம் ஆணவத்தில் அழுந்தி அறிவு செயலற்றுக்கிடந்த காலத்தில் நம்மோடுடனிருந்து ஐந்தொழில் செய்தருளி நமக்கு இந்த உடம்பு முதலியவற்றை உபகரித்து [illegible] பல ஐந்தொழில் செய்தருளிப் பின்னர்ப் பாசம் அறுவித்து முத்தியின்பம் அருளுகின்ற சிவபெருமானேயாவர். அவரை நாம் மறந்த காலத்தும் அவர் நம்மை மறவாது நம்மீது கைமாறற்ற அன்பு செய்வர். ஆதலின் அவரே [illegible]ற்ற துணையாயுள்ளவ ரென்பது உறுதியாமென்க. (சைவஞானம்)

169919

# செய்தித் திரட்டு.

ஆவினிப்பட்டி:—விவேகானந்தர் கல்விக்கழக ஆறும் ஆண்டு இரண்டாம் மாசக் கூட்டம் 29-7-32 மாலை கோலாலம்பூர் லாயர் லவுலேஜ் அண்டு எஸ்டிங் ஆபீஸ் எழுத்தாளர் ஜே. பி. தனசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருச்செங்கோடு:—அர்த்தநாரீஸ்வரருக்கும் செங்கோட்டு வேலவருக்கும் ஆடி ௭உ பக்தர்கள் கொண்டுவந்த பால் தயிர் இளநீர் முதலான திரவியங்களால் அபிஷேகித்தும், மஹாநிவேதனம் செய்தும், மாவிளக்கேற்றி வைத்தும், மஹா தீபாராதனங்களை இவ்வூர் தேவஸ்தான பொக்ஷதாரரும் ஆதி சைவாசாரியருமாகிய சேனாதிபதி குருக்கள் நடத்திவைத்தனர். இந்நகர சிவாலயத்தில் நடராஜமூர்த்திக்கு ஆனித் திருமஞ்சன உத்ஸவம் வெகு பக்தி விமரிசையாய்க் கொண்டாடப்பெற்றது.

சிவாலயத்தில் ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகைக்கு, ஆடி ௨௧உ ஆடிப்பூர மகோற்சவம் நகரவாசிகளால் நன்கு நடைபெற்றது.

ஆனி ௨௪உ இவ்வூர் சிவாலயத்தில் மாணிக்கவாசகப்பெருமான் குருபூஜை இனிது நடைபெற்றது.

திருவத்தரகோச மங்கை:—ஆனி ௨௯உ ஸ்ரீமந் நடராஜப் பெருமானுக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் வழக்கம் போல் சிறப்புறச் செய்யப்பெற்றன.

பரிமணக்குடி:—ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவிலில் ஆடி ௧௨உ. ௨௰ம் தேதிகளில் ஸ்ரீ பரமகுரு சுவாமிகள் குருபூஜைமுடித்து அடியவர்க் கமுதருத்தி, சைவசன்மார்க்க சங்கத்தில் தமிழ்மறை முழங்க திரு மு. முத்துப்பிள்ளை முதலானோரால் ஆனந்த நடராஜர் அருட்பிரபாவம், கதிரைவேற்கந்தன் கருணைப் பிரபாவம் ஆகிய ஆத்திகப் பேருரைகளும் பிறவும் நடைபெற்றன.

வில்வாரணி (போளூர்தாலூகா):—நக்ஷத்திரக்குன்றில்சிவசுப்ரமண்யராலயத்தில் ஆடி ௨௪உ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜையும் தேவாரகோஷ்டி புராண படனங்களும், மகேஸ்வரபூஜை ஆயிரக்கணக்கான ஏழைமக்களுக்கு அன்னதானமும் மிக்க விமரிசையாய்நடந்தேறின.

* * *

மருதவாணர் தாலாட்டு:—கண்டனூர் சிவநேசச் செல்வர் தெ. அரு. சித. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் இயற்றி அச்சிட்டு வழங்கியது. தெ. இலக்குமி புரத்தில் ஆடிமீ ௫உ கூடிய சிவநேசர் திருக்கூட்டத்தில் படிக்கப்பெற்றது. அடுத்த திங்கட் சிவநேசனில் வரும்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிகட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயவுண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மை யாதியகட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட் கொண்டுவரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

உள்நாட்டிற்கு ரூ 2 4 0 அதற்கு மூலதனம் ரூ 30 0 0

அயல் நாடுகளுக்கு ரூ 3 0 0 அதற்கு மூலதனம் ரூ 40 0 0

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகை நேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயசிந்தனை சாத்திரசிந்தனை, தெய்வசிந்தனை, ராஜசிந்தனை ஆகிய சிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ங. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வரும் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப்படமாட்டா. சு. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக்கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சு வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர் மனதிற் குகந்த வண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பட்டது.

MADRAS 1951